## ஸத்தியதரிசனம்.

மஹாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4, அத்தியாயம் 38.

### யுத்தத்தில் செய்த உதவி.

தேக சௌக்கியத்திற்காக பாரிஸுக்குச் சென்றிருந்த இடத்தில் கோகலே மாட்டிக் கொண்டு விட்டாரென்று இங்கிலாந்துக்கு வந்ததும் நான் கேள்விப்பட்டேன். லண்டனுக்கும் பாரிஸுக்கும் போக்கு வரத்து வசதியில்லாமற் போய் விட்டதால் அவர் எப்பொழுது திரும்பி வருவாரென்று தெரியவில்லை. அவரைப் பார்க்காமல் ஊருக்குத் திரும்பி விட நான் விரும்பவில்லை. ஆனால் அவர் எப்பொழுது இங்கிலாந்துக்குத் திரும்பி வருவாரென்று சொல்லுவாருமில்லை.

இதற்கிடையில் நான் என்ன செய்வது ? யுத்த விஷயத்தில் என்னுடைய கடமை யாது ? என்னுடைய சிறையிலிருந்தவரும், ஸத்தியாக்கிரக இயக்கத்தில் எனக்குச் சகாவாக இருந்தவருமான ஸோராப்ஜீ அதஜேனிபா பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தார். ஸத்தியாக்கிரகிகளில் அவர் முதல் தரப் பெயர் வழியானதால் என்னுடைய ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ளுவதற்காக பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்க அவரை அனுப்பியிருந்தோம். டாக்டர் பிராஞ்சீவன் தாஸ் மேட்டா அவருடைய செலவுகளைக் கொடுத்து வந்தார். அவருடனும் அவர் மூலமாகவும் இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்த டாக்டர் ஜீவராஜ மேட்டா முதலியவர்களுடன் நான் சம்பாஷணை நடத்தினேன். அவர்களைக் கலந்து கொண்டு இங்கிலாந்திலும் அயர்லாந்திலுமுள்ள இந்தியர்களின் கூட்டத்தைக் கூட்டினேன். என்னுடைய அபிப்பிராயத்தை அவர் முன் தெரிவித்தேன்.

இங்கிலாந்திலுள்ள இந்தியர்கள் மகா யுத்த விஷயத்தில் தங்களாலியன்றதைச் செய்ய வேண்டுமென்று நான் அபிப்பிராயப்பட்டேன். ஆங்கில மாணவர்கள் ராணுவத்தில் சேருவதாக அறிவித்திருந்தார்கள். இந்தியர்களும் அவ்விதம் செய்யாமலிருப்பதற்கில்லை. இத்தகைய வாதத்திற்குப் பலவித ஆட்சேபங்கள் சொல்லப்பட்டன. இந்தியர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் அதிக வித்தியாசமிருக்கிறதென்று சொல்லப்பட்டது. இந்தியர்கள் அடிமைகளென்றும், வெள்ளைக்காரர்கள் எஜமானர்களென்றும் சொன்னார்கள். எஜமானுக்கு நெருக்கடியான சமயம் வரும்போது அடிமை அவனுடன் எவ்விதம் ஒத்துழைப்பது என்று கேட்டார்கள். விடுதலையடைய விரும்பும் அடிமைகள் எஜமானுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தைத் தங்களுக்கு அனுகூலமாக உபயோகித்துக் கொள்ள வேண்டுமா வென்று கேட்டார்கள். இந்த வாதங்கள் அப்பொழுது என் மனதில் தைக்கவில்லை. இந்தியர்களுடைய அந்தஸ்துக்கும், ஆங்கிலேயர்களுடைய அந்தஸ்துக்கும் இருந்த வித்தியாசம் எனக்குத் தெரியாமலிருக்கவில்லை. இருந்தாலும் இந்தியர்கள் அடிமைகளின் ஸ்திதிக்கு வந்து விட்டதாக நான் அப்பொழுது நினைக்கவில்லை. இது தனிப்பட்ட பிரிட்டிஷ் அதிகாரிகளின் பிசகுதானென்றும், பிரிட்டிஷ் ஆட்சி முறையில் தோஷமில்லையென்றும், அன்பினால் அவர்களைத் திருப்பி விடலாமென்றும் நான் நினைத்தேன். பிரிட்டிஷாருடைய உதவியினாலும், ஒத்துழைப்பினாலும் இந்தியர்கள் தங்களுடைய அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளலாமெனில், அவர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியான சமயத்தில் அவர்களுக்குத் துணையாகவிருந்து பிறகு அவர்களுடைய உதவியைப் பெற வேண்டுமென்று நான் நினைத்தேன். ஆட்சி முறை கெடுதலானதாக இருந்த போதிலும், இப்பொழுது இருப்பது போல் சகிக்க முடியாததாக இருக்கவில்லையென்று அப்பொழுது நான் நினைத்தேன். இப்பொழுது ஆட்சி முறை[illegible] இழந்து பிரிட்டிஷாருடன் ஒத்துழைக்க மறுக்கையில், பிரிட்டிஷ் ஆட்சி முறையிலும் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தரிடத்திலும் நம்பிக்கையில்லாதவர்கள் அப்பொழுது எவ்விதம் ஒத்துழைப்பதற்கு சம்மதிக்க முடியும் ?

என்னுடைய அபிப்பிராயத்தை எதிர்த்த நண்பர்கள் இந்தியாவின் கோரிக்கைகளை தைரியமாக வெளியிடுவதற்கும், இந்தியர்களுடைய அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளுவதற்கும் அது தான் காலமென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

இங்கிலாந்தின் நெருக்கடியான நிலைமையை நமக்கு அனுகூலமாக உபயோகித்துக் கொள்ளக் கூடாதென்றும், யுத்தம் நடந்து கொண்டிருக்கும் காலத்தில் நமது கோரிக்கைகளை வற்புறுத்தாமலிருப்பதே தூரதிருஷ்டியுள்ளவர்கள் செய்யக் கூடிய காரியமென்றும் நான் அபிப்பிராயப்பட்டேன். ஆகவே என்னுடைய அபிப்பிராயத்தை விட்டுக் கொடுக்காமல், ராணுவத்தில் சேர விரும்புவோர் வாலண்டியர்களாகப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டேன். பலர் முன் வந்தனர். அவர்கள் எல்லா மதத்தினருக்கும் பிரதிநிதிகளாக விருந்தனர்.

இந்த விஷயங்களை லார்டு குருவுக்கு அறிவித்து, எங்களுடைய உதவியை ஏற்றுக் கொள்ளுவதற்குப் பூர்வாங்கமாக ஆம்புலன்ஸ் வேலையில் எங்களைப் பழக்க வேண்டியது அவசியமானால் அதற்குத் தயாராக இருப்பதாகவும் சொன்னேன். லார்டு குரு சிறிது தயக்கத்திற்குப் பிறகு எங்களுடைய உதவியை ஏற்றுக் கொண்டு இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ஏகாதிபத்தியத்திற்குதவி செய்ய முன் வந்ததற்காக வந்தனம் செலுத்தினர்.

வாலண்டியர்கள் பிரபல டாக்டர் காண்டிலியின் மேற்பார்வையில் பிரதம சிகிச்சைப் பயிற்சி பெற்றனர். ஆறு வார காலந்தான் பயிற்சி கொடுக்கப்பட்டது. இருந்தாலும் எல்லா அம்சங்களும் கற்றுக் கொடுக்கப்பட்டன.

நாங்கள் 80 பேர்களிருந்தோம். 6 வார காலத்தில் எங்களைப் பரீக்ஷித்தார்கள். ஒருவரைத் தவிர மற்றவர்கள் பரீக்ஷையில் தேறினர்கள். பிறகு கவர்ன்மெண்டார் எங்களுக்கு ராணுவப் பயிற்சியும் இதர பயிற்சிகளும் சொல்லிக் கொடுத்தனர். கர்னல் பேக்கரை இந்த வேலையில் நியமித்திருந்தார்கள்.

அக் காலத்தில் லண்டன் பார்ப்பதற்கு அரிய காக்ஷியை அளிக்கத்தக்கதாக இருந்தது. எங்கும் பீதியில்லை. இருந்தாலும் ஒவ்வொருவரும் தங்களாலியன்ற உதவியைச் செய்து வந்தனர். திட சரீரிகள் யுத்த ரங்கத்திற்குச் செல்லுவதற்குப் பயிற்சி பெற்றனர். விருத்தர்களும், ஸ்திரீகளும் என்ன செய்வது ? அவர்களும் வேலை செய்ய இஷ்டப்பட்டால் வேண்டிய வேலையிருந்தது. காயப்பட்டவர்களுக்கு ஆடைகளும் மற்றவைகளும் தயார் செய்யும் வேலையில் அவர்கள் ஈடுபட்டார்கள்.

உல்வியம் என்ற ஒரு ஸ்திரீகள் கிளப்பினர் ஸோல்ஜர்களுக்கு தங்களாலியன்றவளவு உடைகளைத் தயாரித்துக் கொடுக்க ஒப்புக் கொண்டார்கள். ஸ்ரீமதி ஸரோஜினி இந்தக் கிளப்பில் ஒரு உறுப்பினியாக விருந்தார். அவர் மூர்த்தண்யமாக இந்த வேலையில் இறங்கினர். இந்த சமயத்தில் தான் அவருடைய பரிச்சயம் எனக்கு ஏற்பட்டது. அவர் ஒரு குவியல் வெட்டிய துணிகளை என் முன் வைத்து, அவைகளைத் தைத்து அனுப்பும்படி சொன்னர். அதை நான் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டு, பிரதம சிகிச்சைப் பயிற்சி பெற்ற காலத்தில் நானும் என்னுடைய நண்பர்களும் எங்களால் சாத்தியமான வரையில் தைத்துக் கொடுத்தோம்.

## வைதீகரின் வாழ்க்கை.

ஸ்ரீ அ. கு. அண்ணாமலை எழுதியது.

2-வது அத்தியாயம்.

### லஞ்சத்தால் நீதி பஞ்சாய்ப் பறந்தது.

(முன் தொடர்ச்சி)

மனிதரில் வேற்றுமையில்லை; தீண்டாமை யென்பது சிலரின் மூளையி லேற்பட்ட நோயினாலுண்டானது; எல்லோர் மாதாக்களும் பத்து மாதங்கள் சுமந்தே பெற்றார்கள். உயர்ந்தவர்களென்பவர்கள் ஆகாயத்திலிருந்து குதித்து விடவில்லை; அவர்களுக்கு யாதொரு அங்கமோ அல்லது அறிவோ அதிகமோ யுண்டாகி விடவில்லை யென்ற உண்மையை யுத்தேசித்தே தெய்வம் நமது வைதீகரையும், ஆதித்திராவிடரையும் ஒருவரை யொருவர் கவனிக்காது மேலே நோக்கிய வண்ணம் எதிரே விடுத்தது போலும் !

கல்விக் குறைவாலும், ஆரோக்கிய வழி யறியாமை யாலும், சேர்க்கை வாசனை யாலும், அறியாதோர் சொற்புத்தி கேட்பதினாலும் நம் மாதர்கள் தங்கள் குழந்தைகளை அடிமைகள் போல் நடத்துகிறார்கள். இவர்களெப்படி தங்கள் பிள்ளைகளை நடாத்துகிறார்களோ அஃதே போல் இவர்கள் கணவன்மார்கள் இவர்களை அடிமை போல் நடத்துகிறார்கள். இக் கணவன்மார்களை பிராமணர்கள் அடிமைபோல் நடத்துகிறார்கள். எல்லோரையும் ஆங்கிலேயர் அடிமை போல் நடத்துகிறார்கள். ஆனால் இறைவனெல்லோரையும் அன்பாய் நடத்துகிறாரென்று இருவர் வழிப்போக்கில் பேசிக் கொண்டு போனதையும் வைதீகர் கேட்டுக் கொண்டார்.

பழுத்த வைதீகரும், ஆதித்திராவிடரும் நெருங்கினர். திடீரென மோதிக் கொண்டனர். அவ்விடம் சேர் நிறைந்த வழுக்கல் தரை. திடுக்கெனப் பயந்தனர். வைதீகர் கீழேயும், ஆதித்திராவிடர் மேலேயுமாக விழுந்தனர்.

தூரத்தில் நின்று அப்பொழுது தான் இச் சம்பவத்தைப் பார்த்த போலீஸ் சேவகரொருவர் இரு கிழவர்களும் குஸ்தி செய்கிறார்களென வெண்ணி ஓடி வந்தார். நெருங்கிய போலீஸ் இவ்வளவு வயதுக்குப் பின்னுங்களுக்கென்ன மனஸ்தாபம் நேர்ந்தது ? உங்களை சார்ஜ் செய்திருக்கிறது; ஸ்டேஷனுக்கு வாருங்களெனக் கூறி யழைத்தார். இதற்கவர்களிருவரும் கஷ்டத்துடனெழுந்து வெட்கி நடந்த விஷயத்தை விளம்பினர். இதைச் செவியுற்ற போலீஸ் வயிறு குலுங்கக் குலுங்க நகைத்து அவ்விடம் விட்டகன்றார்.

வைதீகருக்கு மூக்கின் மேல் முனி ஜனித்து விட்டது. ஆதித்திராவிடரை நோக்கி இடியிடிப்பதுபோல ஆபாச வார்த்தைகளால் தூஷித்து விட்டார். தீட்டு ஒட்டிக் கொண்டதே யென்று துக்கக் கடலில் நீந்தினர். வாய் வலிக்கத் தூஷித்து மன வேதனையடைந்தார். ஆனால் தூஷித்ததினால் தீட்டுப் போய் விட்டதா வென்ற ஞானம் வைதீகருக்குத் தட்டுப்படவில்லை. அவாராப் புத்தி அவமான சித்தி. யோசனையின்றி செய்த லாபது நாசத்தையே பெயரும். கோபம் பரிகாரமான நிலைக்குக் கொண்டுவந்துசேர்த்து விடும். அபாசமான வார்த்தை ஆபத்துக்கு வித்தே. வைதீகரின் இடி வார்த்தை ஆதித்திராவிடரின் செவி வழி சென்று ஈட்டி போல் குத்தியதால் வைதீகருக்கு உண்டான முனியை விட பன் மடங்கு ஆதித்திராவிடருக் குதித்து விட்டது. முன் கோபியான ஆதித்திராவிடர் வைதீகர் தீட்டுத் தீட்டென்றடிக்கடி சொல்வதைக் [illegible] அரிசியைத் தீட்டுவார்கள்; நானுன் முதுகில் தீட்டுகிறே னென ஆத்திரத்துடன் வைதீகரின் முதுகில் தன் கையால் தீட்டினன்.

தற் செயலாக அவ்விடம் துவிச் சக்கர வண்டியி லேறி வந்த போலீஸொருவரிதைக் கண்டிருவரையும் பிடித்துக் கொண்டு போனர். அவ் வண்டியின் பின் போலீஸோடு சப் இன்ஸ்பெக்டர் மகனும் ஏறி வந்ததால் ஆதித்திராவிடர் போலீஸுக்கு லஞ்சம் கொடுக்க முடியவில்லை. போலீஸ் இருவரையும் சப் இன்ஸ்பெக்டரிடம் கொண்டு போய் நிறுத்தினர்.

இருவரும் விசாரிக்கப்பட்டனர். போலீஸும் வாக்கு மூலம் கொடுத்து உத்தரவின் பேரில் வெளியே போய் விட்டனர். இன்ஸ்பெக்டருக்கு ஆதித்திராவிடர் ரகஸியமாய் ரூபாய் ஐம்பதைக் கொடுத்தவரன்பதைப் பெற்றார். ஐம்பது ரூபாயானது சப் இன்ஸ்பெக்டரின் மூளைக்குட் சென்று நியாயத்தைத் திருப்பி வைத்து விட்டது. சப் இன்ஸ்பெக்டர் வைதீகரை நோக்கி உங்கள் மேல் தான் குற்றமிருக்கிறது; ஏனெனில், சர்க்கார் சட்டம் ஒருவரைக் கண்டொருவர் விலகிப் போக வேண்டுமென்றில்லை; ஆனதால் நீங்கள் முதலில் தூஷித்ததாலிவ்வளவு தூரம் விஷயம் வளர்ந்திருக்கிறது; அவன் விலகா விட்டால் நீங்கள் விலகிப் போகாதது இரண்டாவது குற்றம்; உங்கள் மேல் குற்றத்தை வைத்துக் கொண்டு அவனையிவ்வளவு தூரம் இழுத்து வந்து கஷ்டப்படுத்தியது மூன்றாவது குற்றம்; நீங்கள் கிழவராயும், என் சாதியான பிராமணராயுமிருப்பதால் மன்னித்தேன்; போ மெனக் கூறி மேல் நடவடிக்கை நடத்தாதபடி வைதீகரை அரட்டி மிரட்டி அனுப்பி விட்டார். ஈட்டி எட்டிய வரையில் பாயும்; பணம் பாதாளம் வரை பாயுமன்றோ ! பணம் பத்து விதம் செய்யும்.

(தொடரும்.)

### மனிதருக்குச் சிறகுகள்.

லண்டனில் வாசஞ் செய்து வரும் ருஷிய ஆகாயக் கப்பல்களுக்குத் தலைவராயிருந்த விக்டர் கிவோஸ்கி யென்பவர் மனிதர்களும் பறவைகளைப் போல் ஆகாயத்தில் பறக்கச் சிறகுகள் செய்யப் போவதாக யோசனை செய்து வருகிறார். மேலும் அவ்வித சிறகுகள் எல்லாருக்கும் கிடைக்கக் கூடியதான அவ்வளவு மலிவான விலைக்குள் முடிக்கப் போவதாகவும் சொல்லுகிறார். இப்பொழுது அம்மாதிரி இரண்டு சிறகுகள் செய்திருக்கிறார். அவைகளைக் கொண்டு முதலில் தானே பரீட்சை செய்ய, கூடிய சீக்கிரத்தில் பாரிஸ் நகருக்குப் பறக்கப் போவதாகவும், மேலும் எப்படி பறவைகள் தங்களது சிறகுகளின் உதவியால் ஆகாயத்தில் தங்களுக்குத் தோன்றுங் காலம் வரைக்கும் நிற்க முடியுமோ அப்படியே தான் செய்யும் சிறகுகளின் உதவியால் மனிதரும் ஆகாயத்தில் தங்களுக்கு வேண்டிய நாழிகை வரைக்கும் தங்கக் கூடுமென்றும் சொல்லுகிறார். மேலும் தான் செய்திருக்கும் சிறகுகள் சரியாக வேலை செய்தால் இவ்வித சிறகுகளின் உதவியைக் கொண்டு மனிதர்கள் தரையில் நடப்பது போலவே அவ்வளவு சுலபமாக ஆகாயத்திலும் பறக்க முடியுமென்று கூறுகிறார்.

பறவைகளின் சிறகுகளுக்கு நரம்புகளின் உதவியிருக்கிறது போல் தான் செய்யும் சிறகுகளுக்கு ரப்பரினால் நரம்புக் கூடுகள் செய்வதாகக் கூறியிருக்கிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பொழுது போக்கு.

(பொய்யில்லான் பொறித்தது)

அகங்கார மென்பது மனிதனின் அசுர குணங்களில் ஒன்றாகும். இக் குணம் குடிகொண்ட மாந்தர் பிறர் மனக் காய்ச்சலுக்குள்ளாயே யிருந்து வருவார்கள். இது பிறர் நன்மதிப்புக்காளாக்க வொட்டாது. இது கொண்டார்கள் தாம் உயர் பீடத்திலுள்ளவர்களென்ன ஏனையோரைக் கீழ் நோக்கிப் பார்த்து வருவார்கள். இப் பார்வை இவர்தன் தயவின் கீழுள்ளவர்களிடமே செல்லுமே யொழிய இதரர் மிசை படர்வதரிது. இவ ரென்ன கர்விதர், அல்லவோ என்று பிறர் சூடு போடும்போது தலைகாண வேண்டியது தான். இக் குணங்கொண்டு இயங்குபவர் வாழ்க்கை வழியில் முட்டுற வேண்டியது தான். இவர் சகவாசம் நமக்கேன் எனப் பலரும் உதறித் தள்ளுவார்கள். அது சமயம் இவர்கள் பாடு திண்டாட்டம் தான். உலகியலுக்குப் பொருந்தாத இக் கெடு குணத்தை எவர் பாலும் கையாளக் கூடாது. செல்லு மிடத்தில் செலுத்துவோ மென்று தம்மை யெதிர் நோக்கி யிருப்பவர்களிடையே காட்டுவதும் தவறு. இங்கே அன்பு நெறி தவறியவராகுகிறார்கள். சமூகமார் நடையில் பழகினால் இவர்கள் கீழுள்ளவர்களின் வாழ்த்துதலுக்குரித்தாராகிறார்கள். அன்பு வழி நின்றியங்குவதைப் பார்க்கிலும் அகங்கரித்து நிற்பது சிறப்புடைத்த தன்று. பாவம் என்பது உண்டு. இதை மறுக்க யாராலும் முடியாது. இப் பாவ வழி கூட்டும் தோஷங்களில் இவ் வகங்காரமும் ஒன்றாகும். தம்மை யெதிர் நோக்கி வாழும் மக்களிடத்து அதிஷ்ட வசத்தால் தமக்குக் கிடைத்த நன்னிலையால் அகங்காரம் கொழிப்பது பாவம் பயக்கிறது. இறைவன் இவர்கள் அகங்காரங்கண்டு அகங் கொதிக்கிறான்; இவர்களைப் பாதலம் மட்டும் தாழ்த்தவே யிருக்கிறான் என்பதை யறிய வேண்டும். இகத்தில் இடையூறும், பரத்தில் தண்டனையும் தரும் இவ் வகங்காரம் வேண்டாம் வேண்டாம். எனவே எல்லோரும் அகங்கார மொழித்து எல்லோரிடத்தும் வாஞ்சை யுள்ளத்துடன் பழகி வருவோமாக.

ஃ ஃ

அடுத்த மாதம் பங்குனி மாதம். அம் மாதத்தில் மாரியம்மனுக்குப் பொங்கல் உற்சவம். அதைக் கொண்டாடுபவர்களுக்கு வெகு கொண்டாட்டம். நம்மைப் போல் உலகத்தில் ஜீவித்துப் போக வந்த ஆடு, கோழிகளுக்குத் திண்டாட்டம். திண்டாட்டம் எதற்கு? உயிர் பலி கொடுக்கப் போவதாற்றான். மாரியம்மன் பேரைச் சொல்லி வெட்டியும், அறுத்தும் சாப்பிட்டு விடுவார்கள். மாரியம்மன் அவற்றை வெட்டிப் பலி கொடுக்கச் சொல்கிறதா? இல்லை இல்லை. சொல்லுவதாக மருளானது அவர்கள் ஞானத்தை மூடிக் கொள்கிறது. உண்மைத் தெய்வம் கொலைக்குப் பாத்திரமாகுமா? ஆடு, கோழிகளும் அதனுடைய படைப்புத்தானே? அவற்றின் மேல் அதற்கு அவ்வளவு கடுஞ் சித்தமா? அப்படி யொன்றும் ஆடு, கோழிகள் கெடுதி தருவதா யில்லையே! பக்தியுடன் பரிசுத்தப் பொருட்கள் வைத்து ஆராதனை செய்ய வேண்டும். அவ்வாராதனையே பரிசுத்த ஆராதனையாகும். அப் பரிசுத்தப் பொருட்களில் ஆடு, கோழிகளையும் சேர்த்துக் கொள்வது தான் அறியாமை. தாம் ருசி கொள்ளுவதற்காகத் தெய்வப்பெயரால் பாவ மிழைக்கிறார்கள். இப் பாவம் தெய்வத்தைச் சாராது. சாராதென்றால் தெய்வம் மறுக்க வில்லையே யென்பார். அது மறுக்கவும் செய்யாது; விரும்பவும் செய்யாது. மறுக்கவும், விரும்பவும் அதற்கு அக்கரையில்லை. நம் நலனுக்கு நாம் பகுத்தறிவுடன் நடந்து கொள்ள வேண்டும். தெய்வம் காட்டுமே யொழிய ஊட்டாது. காட்டுவது விரத மனுட்டிப்பதிலிருக்கிறது. விரத மனுட்டிப்பதில் மாமிசம் சாப்பிடுவதுண்டா? எவ்வளவு பரிசுத்தமாய் நடந்து கொள்கிறோம்! இப்படி யிருந்து விட்டு பின் அத் தெய்வத்திற்கே யென்று ஆடு கோழிகளைப் பலி யிடுவதென்றால் ஒப்புக் கூடிய நியாயமா? யுகித்துப்பாருங்கள். தெய்வம் பலி விரும்புவதில்லை யென் றுணர்வீர்கள். கொல்வதும், கொன்றதைத் தின்பதும், கொல்ல நினைப்பதும் பாவம் என்று எந்த நூற் பிரமாணங்களாலும் அச்சுறுத்தலாம். எனவே பிற ஜீவன்களிடத்து காருண்யம் வைத்து மாமிச உணவு நீக்கி வரப்போகும் பங்குனி உற்சவத்தை தெய்வம் ஒப்பும் புனித ஆராதனை யுடன் இனிது நடைபெறச் செய்வார்களாக.

ஃ ஃ

'பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும்' என்பது நாட்டு மொழிகளில் ஒன்று. பணம் என்றால் அவ்வளவு ஆவல் போலும்! ஒரு குறிப்பிட்ட பணத்திற்கு ஆவல் கொண்டிருந்தவர் அது கைக்குக் கிட்டாமல் போனால் அதே ஏக்கங் கொண்டு பைத்தியங் கொண்டு விடுகிறார்கள். சிறிது காலத்திற்கு முன் நாட்டிடை மலிந்து கிடந்த லாட்டரிச் சீட்டுகள் பலரைப் பைத்தியக்காரர்களாக்கி விட்டன. பைத்தியங் கொள்ளா திருப்பவர்களையும் அவர்களின் நோக்கங் கண்டு அவர்கள் பக்கத்திலுள்ள வேடிக்கை விரும்பிகள் பைத்தியக்காரர்களாக்கி விடுகிறார்கள். பைத்தியங் கொள்ளுவதற்கு இவர்கள் குறி கொண்ட முதல் பிரைஸ் தான். தமக்கே முதல் பிரைஸ் விழ வேண்டு மென்று அல்லும் பகலும் நினைத்து அவர்கள் புத்தி அதில் லயித்து விடுகிறது. அவர்களுக்கு விழுந்து விட்டதாக வேடிக்கையாகச் சிலர் சொன்னவுடன் மன மானது சட்டென்று அவர்கள் வார்த்தைக் குள்ளாகி பிரைஸ் பணம் கேட்கப் பிரயத்தனப்பட்டு விடுகிறார்கள். முதல் பிரைஸ் யாருக்காவது விழுந்திருக்கும். பிரைஸ் ஜாபிதாவைக் காட்டினாலும் இவர்கள் நம்புவதில்லை. பண ஏக்கம் முற்றி பைத்தியங் கொண்டவராதலால் ஓயாது அப் பணக் கனவிலேயே யிருந்து பரிதபிக்கிறார்கள். வெறும் வாயை மெல்லுபவர்கள் கொஞ்சம் அவல் கிடைத்தால் சும்மா விருப்பார்களா? வேடிக்கைக் காரர்கள் இப் பைத்தியக் காரர்களைக் கண்டால் சும்மா விடுவதில்லை. பணம் வாங்குவதற்குத் தூண்டி அவர்களைப் பரிதாப நிலைக்கு ஆளாக்கி விடுகிறார்கள். இப் பணப் பைத்தியக் காரர்கள் பணம், பணம் என்று பரிதபித்துச் சாகிறார்கள். இவர்களுக்கு யாம் இரங்கி யாமும் பணப் பித்துக்கொள்ளாதிருக்க ஆண்டவனை வேண்டுவோமாக.

ஃ ஃ

பெண் கல்வி பெரிதும் வேண்டற்பாலது. இது பற்றி அறிவாளிகள் பலர் விரித்துரைத் திருக்கிறார்கள். அவற்றின்படி நாம் நம் பெண் குழந்தைகளைப் பள்ளிக் கனுப்பிப் பயன் பெறுதல் வேண்டும். பெண்கள் படித்தால் ஆய் பயன் என்? என்பது சிலர் கேள்வி. இது அறியாமையால் வினவல் ஆகும். அடுப் பூதும் பெண்களுக்குப் படிப் பெதற்கு? என்பதும் சில பேதையர் கூற்று. படிப்பினால் நல் நடத்தை வந்தடைகிறது என்பதை யவர் அறிய மாட்டார் போலும். இன்னவையார் படித்துத்தான் என்ன பிரயோஜனம் எனக் கேள்வி பிறந்தால் இவர் என் சொல்லுவர்? இல்லற வாழ்க்கை இனிது நடை பெற வேண்டுமெனில் பெண் கல்வி அகத்தியம் வேண்டும். இரு மாடுகள் ஒத்த மனதாய் இருந்தால் தானே சகடம் ஒழுங்காய் ஓடும். இல்லறச் சகடத்திற் பூட்டிய இரு மாடுகள் புருஷனும் மனைவியு மாவர். இவர்களிருவரும் ஒத்த மனத்தினரா யிருந்தாலன்றோ இவர்கள் இல்லற வாழ்க்கை பரிமளிக்கும்? புருஷன் படித்திருந்தால் இவன் படிப்புக் குரிய வகைத்து வாழ்க்கை நடாத்த எண்ணுவான். அது சமயத்து மனைவியும் கற்றாள் யிருந்தாலன்றோ இவன் கருத்துக் கியைய நடை கொள்ளுவள்? இன்றேல் வாழ்க்கை எங்ஙனே சுக முறும்? ஒருவன் தன் மனைவியோ அன்றி மக்களோ புத்தி தீக்ஷண்ய முள்ளவளாய் இருக்க வேண்டு மென்று எண்ணா திருப்பதில்லை. அவ் வெண்ணம் எவ்வாறு ஈடேறுவது? படிப்பினா லன்றோ? ஒருவன் தனக்கு அறிவுடைய பிள்ளை தோன்ற வேண்டு மென்று நினைக்கிறான். இவன் அறிவு மரமா யிருந்து அறிவு வித்து விதைத்தாலும் அறிவுச் செடி [illegible] விளைநிலமாம் தன் பெண்டிரும் அறிவு சார்ந்தவளா யிருத்தல் வேண்டும். அவ் விளை நிலம் மூட மண் மூடப் பெற்றிருந்தால் வளரும் செடியின் அறிவு பாதிக்கப்பட்டே விடும். மேலும் பிள்ளைக்கு முதற் குரு தாயே யாவள். அவள் போதனையும், நடை முறையும் தான் பிள்ளைக்குப் படியும். அறிவுடையாளெனின் பிள்ளை அறிவுத் தேக்கம் உடையதாகும். இலதேல் மூட சிகாமணியே யாகும். தன் காலத்தும், பின் வாரிசுகளுக்கும் வாழ்க்கை முறையில் கேடு விரும்பிக் கொள்ளுபவர்தான் பெண் கல்வி விரும்பாதவர். பெண் கல்வியின் பெருமை பற்றி எம்மட்டும் எழுதலாம். அநியாயமாய் பெண் மக்களைக் கல்வித் துறையில் விடுக்காது கெடுக்க வேண்டாம். படித்த பெண்களின் பரிமணத்திற்கோர் தனி மதிப்பிருக்கிறது. ஆண் மக்களில் படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கும் வித்தியாசம் காண்கிலோமோ? அவ்வித்தியாசத்தைப் பெண்களுக்குள்ளும் புகுத்தி ஒவ்வொரு பெண்ணும் படிப்பதற்கு மார்க்கந்தேட வேண்டும். படிப்பிலாதார் விலங்கினமே யென்பது விழுமியோர் சொல். அஃது பொய்யின்றியே யிருக்கக் காண்கின்றோம். எனவே நம் எல்லோருடையவும் வாழ்க்கை மிருகத் தோடியைந்ததா யிராமல் மனுஷியோடியைந்ததா யிருப்ப பெண்கல்வி அபிவிர்த்தியாகப் பாடு கொள்ளுவோமாக.

## பாரத நாட்டின் நிலைமை.

(பிரம்மஸ்ரீ ஞானானந்த சுவாமிகள் எழுதியது.)

[முன் தொடர்ச்சி]

ஜாதி பிரிந்திடாதிருக்க வேண்டி புருடர்கள் பக்தியில் ஒழுகுதல் வேண்டும். பக்தி என்பது ஒன்பது வகை. சிரவணம், கீர்த்தனை, ஸ்மரணை. சேவை, அர்ச்சனை, வந்தனம், தாசியம், சக்கியம், ஆத்ம நிவேதனம் என ஒன்பது வகைத்து. பத்தாவதாக பாரமார்த்திகம் எனும் பக்தி யனுபவிப்பதே மோக்ஷமாகும். முன் ஒன்பது வித பக்திகளும் படிப்படியாக சரியை, கிரியை, யோகம், ஞான மென நான்கு விதமா யனுபவிக்க வேண்டும். நம் தாயுமானவரும் "விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான மிநான்கும் அரும்பு, மலர், காய், கனி போலன்றோ பராபரமே" என்றார். அதன்படி நாம் ஒழுகாமற் றவறினால் ஆஸ்திகர்களென்னும் பெயர் மாறி நாஸ்திகர்களெனப் பெயர் தாங்குவோம்.

பத்துப் படிகள் கடந்து ஒரு அற்புத பாவையைப் பார்க்கவேண்டு மெனின் ஒவ்வொரு படியாக ஏறியே போக வேண்டும். அதுபோல் நாம் ஞானத்திருந்து அப் பொருளை யடைய முன் படிகளாகும் சரியை, கிரியை, யோக மனுபவித்து ஞான மடைந்து தான் பாரமார்த்திகப் பொருளாகிய இறைவனை யடைய வேண்டும்.

இப்படி பக்திகள் பத்து மனுபவிக்குங்கால் "மூர்த்தி தலந் தீர்த்த முறையே தொடங்கினர்க்கோர் வார்த்தை சொல சற் குருவும் வாய்க்கும் பராபரமே" என்ற நம் தாயுமானவர் வார்த்தைக் கிணங்க குருவருளால் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனும் அங்கங்கள் எட்டினையும் அனுபவித்தருள் பெறலாம். ஆனால் சிஷ லக்ஷணத்தில் மக்களா நித்தியா நித்திய வஸ்து விவேகம், இக முத்ரார்த்த பல போக விராகம், சமாதி சட்கம், முமுட் சுத்துவம் எனும் நான்கு சாதனங்களையும் குரவனிட மிருந்தனுபவித்திருந்தாற்றான் அக் குரவன், பாசவைராக்கியம், ஜீவகாருண்யம், ஈஸ்வர பக்தி, பிரம்ம ஞானம் எனும் நான்கினையும் அனுபவித்து பெற்ற பெரும் பேற்றைக் காட்டி யூட்டி வைப்பன்.

இதற்கு மக்கள் உணர வேண்டியது முக்கியமாக ஒன்று. அதாவது, இயமாதிகள் எட்டினுள்ளும், முதல் இயமத்திற்கு கிளைகள் ஐந்து. அவைகள் கொல்லாமை, பொய்யாமை, கள்ளுண்ணாமை, திருடாமை, பரதாரகமன மில்லாமை என்பன. இவ் வைந்தினுள்ளும் கொல்லாமையே முதற் படியாகும். இதை யுணர்ந்து கொல்லா விரதங் கொண்டு அதன்படியே யொழுகி வருபவரே பக்தி யெனும் பெரும் பொருளை அனுபவிக்க ஆரம்பித்தவராவர். நம் தாயுமானவரும் "கொல்லா விரதம் கொண்டவரே நல்லவர், மற்றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே" என்றார். இவ்வாறு பக்தியில் ஆரம்பித் தனுபவித்து மேலேறுபவர்களே ஆடவரில் உயர் சாதியாவர்.

பெண்களில் முதற் ஜாதியாவோர் "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யு மழை" என்னும் செந்நாப் போதார் தமிழ் மறைக் கிணங்க தனது நாயகனையே தெய்வமாகக் கருதி மன மாற்றி ஒழுகிவருதல் வேண்டும். நம் நாட்டில் முன்னவர்கள் ஸனாதன தர்ம இயல்பிற் கிணங்க அறுவித கர்மங்களும் அமையப் பெற்று ஒழுகி வந்தனர். இக் காலத்திலும் அம்மையார் அவ்வாறே தான் நம் நாட்டில் ஒழுகி வருவார்கள். ஆனால் தற்போது இழைத்த புதிய நாகரீக மெனும் மேனாட்டு நாகரீகங் கைக் கொண்ட சிலர் பெண் மக்களுக்குச் சுதந்திரம் கேட்கிறார்கள். பெண்கள் சுதந்திரம் இல்லத்தில் அமர்ந்திற் கிணங்க தனது நாயகன் மனங் கோணாது நடந்து கற்பின் வசந்நிற்பது என்பதை மறந்து புருடர்களைப் போலவே வெளியேகுதல், மிக ஓதுதல், உத்தியோகஞ் செய்தல், ஊரூராய்ச் செல்லல் முதலியனவும் அவசிய மெனவே கூறி வருகின்றனர்.

அந்தோ பரிதாபம்! முன் அருந்ததி தேவியார், வாசுகி தேவியார் முதலிய கற்புடைப் பெண்கள் இருந்திலகிய விலக்ஷணத்தை நம் நாடு ஞாபகத்திற்குக் கொண்டு வர வேண்டும். இவர்களின் கற்பு மிகுதியாற் றம் நாயகர்கள் மனதின்படியும் சொற்படியும் நடந்து முக்தி பெற்ற விலக்ஷண விபர முணர்ந்து அதன்படியே நம் நாட்டின் அம்மையார்களை நடந்து வரத் தூண்டி வர வேண்டியதும், அதன்படியே நடந்து வந்து கொண்டிருக்குமவர்களைச் சரியேற்றிப் புகழ்ந்தும் தவறுதலுள்ளவர்களைச் சீர் திருத்த வேண்டி முன்னவர்களின் முறைகளைப் போதித்து நீதி நிலைக்கச் செய்து வர வேண்டியதும் அவசியம்.

## முத்துப் பதக்கம்.

பற்றற்ற மனத்தினர்க்குப் பார்வையெல்லாம் வெற்றுப் பார்வை தான்.

* *

பசி தீரா விடத்தில் பணத்தினால் எதும் பயனில்லை.

* *

அனுபவஸ்தர்கள் மொழி கேட்டு அதன்படி நடை கொள்ளல் கோரும் கருமத்தை சீருடைத்தாய் நிறைவேற்றி வைக்கும்.

* *

பல பேர்கள் ஒருமித்த யோசனையுடன் செய்யும் காரியமும் தவறிழைத்து விடுகிறது. எனவே ஆட் பெருக்கம் கொண்டு உண்மை நிர்ணயிக்க இடமில்லா தொழிகிறது.

* *

யாவராலும் எதிர் பார்க்கப்பட்டிருந்த ஒரு வெற்றிச் செய்தியை முதன் முதலாக அறிந்த ஒருவர் தன்னை மறந்த ஆர்வத்துடன் அவ் வெற்றிச் செய்தியைப் பிறர்க் குரைப்பதில் துரிதம் கொள்வது இயல்பு.

* *

முடியாத காரியம் ஒன்று முடியும் போது அக்காரியம் முடிகிறது உண்மையோ அன்றி கனவோ என்ற சந்தேகம் உண்டாகிறது.

* *

கைகூடாதென விட்டுவிட்ட ஒரு காரியம் பின்னர் யாம் எதிர்பாராமலே வந்தடைந்து இஷ்ட பூர்த்தியாகி விடுகிறதும் உண்டு.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சசிதுலர் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அர்வருவத் தன்மை நாம
சேது மீண்டு பேய்பொருட்டு பேவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கத் செய்யுஞ்
சேதியை மாந்தா வெளியைமனதவிழ
நிலையிலா அரிய வாழ்வைத்
தீல் பாமரம் போருனேந் தேவருனே
நிலைவுகச் சிந்தை செய்வாம்.

நாடார்குலமித்திரன்
பிரபவ ஞு மாசி மீ ௰௫ உ

## பராசக்தியின் பண்டிகை.

உலக சிருஷ்டி திதி சங்கார கர்த்தாவாகிய ஆண்டவனுடைய அருட் சக்தியையே பற்பல தேசத்திலும், பற்பல நாம ரூபங்களுடன் வைத்து முக்கியமான ஓர் நாளைக் குறிப்பிட்டு தத்தம் இஷ்ட சித்திகளை அடைய வேண்டிப் பண்டிகையாகக் கொண்டாடி வருகின்றார்கள். மேலை நாடுகளில் தேவ மாதா, அல்லது கன்னி மரியாள் என்னும் திருவருட் சத்தி தேவிக்குத் திருவிழாக்கள் நடத்துவதாகவும் தெரிய வருகிறது. நம் பாரத நாட்டின் கண் வங்காளத்தில் காளி, பம்பாயில் துர்க்கா தேவி, மத்திய மாகாணத்தில் பவானி தேவி, மைசூரில் சாமுண்டீஸ்வரி, மலையாளத்தில் பகவதி தேவி, தமிழ் நாட்டில் முக்கியமாக மாரியம்மன் என வெவ்வேறு நாமங்கள் வைத்து வணங்கி வந்தாலும் எல்லாம் பராசக்தியின் அம்சங்களென்றே சொல்லப்படுகிறது.

இவ் வம்பிகைகளுக்கு அந்தந்த தேசங்களில் அவரவர்கள் சௌகரியப்பட்ட காலங்களில் பண்டிகை நாட்களாகக் கொண்டாடுகின்றார்கள். இக்கொண்டாட்டத்தில் கோடிக் கணக்கான ஆடு, கோழிகள் கொல்லப்பட்டு வருகின்றன. எந்தத் தேசத்திலும், எந்தக் காலத்திலும், எந் நாம ரூபத்துடனும், எவரெவர்களும் கொண்டாடட்டும்; மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் ஈஸ்வரனை அடைய வேண்டி எந்த நாம ரூபத்துடன் வணங்கினாலும், துதித்தாலும் அந்த நாம ரூபத்துடனே ஆண்டவன் பிரசன்னமாகி பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றார் என்பதைப் பற்றி நமக்குச் சங்கை வேண்டாம். இத் தேவதைகளுக்கு உயிர்ப் பலி யிடுதல் தகுமா? சரியான முறையா? தர்மந்தானாகுமா? இத் தேவதைகள் மூலமாக அன்பர்களுக்கு அருள் பாலிக்கும் ஆண்டவன் [illegible] ஏற்றுக் கொள்வாரா? என்பது தான் கேள்விகள்.

சிறு தேவதைகளுக்கு உயிர்ப் பலி யிடுதல் மனித தர்மத்திற்கு மாறுபட்ட தென்றும், கொலையும், புலையும் தவிர்ப்பதே மனிதத் தன்மையாகு மென்றும் ஆன்றோர்கள் கூறியிருக்கிறார்கள்; கூறியும் வருகிறார்கள். ஆகையால் மக்களாய்ப் பிறந்த யாவரும் இகபர சாதனங்களை அடைய வேண்டுவதற்குக் கொல்லாமையும், புலால் உண்ணாமையுமே இன்றியமையாதனவாகும்.

நமது தமிழ் வேதமாம் திருக்குறளியற்றிய நாயனாரும் ஊன் உண்ணல் அருளுடையார்க் கடுக்கன்று என்று புலாலுண்ணாமையைப் பற்றி ஒரு அதிகாரம் வகுத்திருக்கின்றார். அதில்

"தன் னூன் பெருக்கற்குத் தான் [பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்"

எனவும்,

"பொரு ளாட்சி போற்றாதார்க் [கில்லை
அருளாட்சி யாங்கில்லை யூன்றின் [பவர்க்கு"

எனவும் கூறி யிருப்பதுடன் கொல்லாமையைப் பற்றியும்

"அறவினை யாதெனிற் கொல்லா [மை—கோறல்
பிறவினை யெல்லாந் தரும்"

எனவும் ஒரு அதிகாரம் வகுத்திருப்பதையும் காணலாம். இன்னும் பல நல் வேதக் கர்த்தாக்களெல்லாம் கொல்லாமையும், புலாலுண்ணாமையும் நல்ல தென்றுகூறுதாரில்லவே இல்லை.

இதை ஏன் நாம் இப்போது கூற வந்தோ மென்றால், வருகிற பங்குனி மாதம் பௌர்ணமை காலத்தில் சென்னை முதல் கன்னிவரையுள்ள தமிழ் நாட்டில் மாரியம்மன் பண்டிகை நடக்கப்போகிறது. இப் பண்டிகை நாட்களில் உயிர்ப் பலியிடுதலை ஒழிக்க வேண்டி, ஓயாமற் பிரசாரம் செய்பவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதில் சென்னையிலுள்ள ஜீவரட்சாமிர்த சபையார்கள் தகுந்த பிரசாரங்கள் செய்தும், இவ்வாண்டில் சென்னையில் அகில இந்திய ஜீவகாருண்ய மகா நாடுங் கூட்டி உயிர்ப் பலி நீக்கலைப் பற்றி முன்னிலும் பன்மடங் கூக்கமாய் வேலை செய்வதென் றுறுதி கொண்டிருக்கின்றார்கள். காரைக்குடி, கூழிப்பிறை சிவனடியார் திருக் கூட்டத்தார்களும் வெகு நாட்களாக வேண்டிய பிரசாரம் செய்து வருகிறார்கள். அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசார சபையாரும் மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னு மனேக இடங்களில் பலி யிடும் கொடிய வழக்கத்தை நிறுத்தப் பெரும் பிரயத்தனங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். நாடார் மகாஜன சங்கமும் இரண்டு மூன்று கான்பரன்ஸ்களில் கோயில்களில் பலியிடக் கூடா தென்று தீர்மானித்து அத் தீர்மானத்தை சங்கம் கௌன்ஸில் அங்கீகரித்து, அதை ஜனங்களுக்குத் தெரியப்படுத்த சர்க்குலர் அனுப்பக் காரியதரிசிகளுக்கு விசேஷ அதிகாரமும் கொடுத்திருக்கிறது. ஆகையால் உயிர்ப் பலிகளை நிறுத்தும் பொருட்டுச் செய்யும் பிரசாரங்கள் இவ் வாண்டிலும் பலமாகவே [illegible] கூடும். ஆகையால் நாட்டின் நன்மையை நாடிச் செய்யும் அன்பர்கள் பிரசாரத்துக்கு ஆதாவாக யாவரும் நடந்து கொள்ளும்படி தமிழ் நாட்டு ஜனங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நாடார் மகாஜன சங்கம் செய்திருக்கும் தீர்மானத்திற் கேற்ப காரியதரிசிகள் கூடிய சீக்கிரம் இது விஷயமாக ஒரு சர்க்குலர் அனுப்ப வேண்டு மென்றும், நாடார் மகாஜன சங்கத்தின் தீர்மானத்தின்படி நாடார் மகா ஜனங்கள் யாவரும் வருகிற பங்குனிப் பண்டிகை நாட்களில் நமது அம்பிகை ஆலயங்களில் ஆடு, கோழிகளைப் பலி யிடும் கொடிய வழக்கத்தை நிறுத்தி அம்பிகை நமது பங்கில் அனுதினமும் இருக்க வெண்ணி அம்மன் சன்னிதானத்தில் உள்ள முருகி உள்ளத்தைப் பலி கொடுத்து ஆனந்தக் கண்ணீ ருகுத்து ஆத்ம திருப்தி கொண்டு உடல், நலம் வேண்டி, உண்பதற்குப் பால், பழம், பாயசம், பஞ்சாமிர்தம் வைத்துப் படைத்து பந்து மித்திர சமேதருடன் அம்பிகையை வணங்கி சம பந்தி போஜன முண்ணுதல் சாலச் சிறந்த தென மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## விளக்கச்சுடர்.

### பிராமணரல்லார் இயக்கம்.

(முன் தொடர்ச்சி.)

பிறப்பினுல் உயர்வு தாழ்வு இல்லை; எல்லோரும் ஒரே மனித சமூகத்தினரேயன்றி மேல் கீழ் என்ற பாகுபாடில்லை என்ற தத்துவத்தை விளக்கி தான் மேல் ஜாதியில் ஜனித்தவன் என்று அகங்கரித்துத் திரிபவர்களையும் (பிராமணராயினும் பிராமணரல்லாராயினும்சரியே) தான் அடிமை; தீண்டப் படாதவன் என்று தன்னையறியாமலே புத்தி தீக்ஷண்ணியமின்றி விலகிக்கொண்டவர்களையும் அவரவர்கள் கொண்டிருக்கும் மடமையை போக்கச்செய்து சமத்துவங்கொண்டாடவே இந்த பிராமணரல்லாத சுயமரியாதை இயக்கம் எழலான்து. அன்றி பிராமணரல்லாதார் என்ற பெயர் தாங்கியிருத்தலான் ஒரு ஜாதியினரின் மேல்பட்ட துவேஷக் காரணமாய் வந்ததென்று வாதிப்பாருமுளர். அது அப்படியல்ல. ஜாதிப்பிரிவினைக்கும் அக்கியராட்சியில் அம்முறை சிறதியதற்கும் காரணமாயும் இவர்கள் ஒருவராலே அனைத்து மக்களும் பேதப் படுத்தப்பெற்று வருவதின் காரணமாயுமல்லாமல் இவ்வியக்கத்துக்கு பிராமணரல்லாதார் இயக்கமெனப் பெயர் வந்ததாகச் சொல்ல முடியாதெனக் கருதுகிறேன்.

பிராமணரல்லாதார் என்ற பெயர் தாங்கியதால் பிராமணரைத் தூஷிப்பதென்றும், அடித்துத் துன்புறுத்துவதென்றும், பலவந்தமாய் ஏதுகாரியமும் செய்வதென்றும் அர்த்தங்கொள்வதாவது அவ்விதம்கருதி எவ்வித அடாத காரியம் செய்வதாவது விலக்கற்பாலனவாகும். அது அறியாத்தன்மை வாய்த்த மூடத்தனமென்பேம்.

மகாத்மா காந்தியடிகளால் தோற்றுவிக்கப்பட்ட சத்தியாக்கிரக இயக்கமானது மகா சாந்தமானது; அஹிம்சையே உருவாயமைந்தது. ஆனால் அதன் நடைமுறையில் மக்களால் அனுஷ்டித்து வைக்கப்படும் காலத்து அடிதடியும் கொலையும் நிகழ்ந்திருக்கின்றனவே யென்றால் அது அந்த இயக்கத்தின் பாற்பட்ட குற்றமாகுமா? இல்லை. அந்த இயக்கத்தை அனுஷ்டிப்பவர்களின் அறியாமையே தான் காரணமாகும். அதனுல் அந்த சத்தியாக்கிரக இயக்கம் மாண்டுபோக வேண்டு மென்பது கருத்தாக மாட்டாதல்லவா? எனவே பிறப்பால் நம்மில் உயர்ந்தவர்களாவது தாழ்ந்தவர்களாவது இடையாது. யாரிடத்தும் மூடத்தனமாய் அதிகாரம் காட்டுவாவது அஞ்சி யொடுங்கவாவதுகூடாது. நமக்கு கல்வி வேண்டும்; நாம் சரித்திரம் பார்க்கவேண்டும்; வேதம்படிக்க வேண்டும்; நமக்குள்ள குறையை நமது மனங்கொண்டு திருத்தி சுத்தி பெறுவதன்றி நமக்காகப்பிறர் செய்து விடுவதாகச் சொல்லி ஏமாற்றிப் பிழைப்பதை ஒடுக்கி அவரவர் மன அழுக்கைக் களைய அவரவர்களே பாடுபடவேண்டும்; சுதந்திரம் நமது பிறப்புரிமை; ஆண்டவன் சிருஷ்டியிலமைக்கப் பெற்ற எவ்விடத்தும் எக்காரியத்திலும் தடையின்றி யீடுபட யாவருக்கும் உரிமையுண்டு; மன ஆர்வமிருந்தும் பிறர் சொல்லுக்கேனும் கட்டுப்பாட்டுக்கேனும் பயந்து உரிமையுள்ளதை உடையப் பின் வாங்காதே என்ற ஜாதியாதி சமதர்ம விளக்கத்தை எடுத்துக் காட்டி பாரம்பரியமாய் குடி கொண்டிருக்கும் அடிமை யெனும் மனவிருளை நீக்க பிராமணரல்லாதாருக்குள்ளே பிரசாரம் செய்வதையே குறிக்கொண்டுள்ள இந்த சுயமரியாதை இயக்கத்தை ஒரு சாரார் மேல் துவேஷம் கொண்டதெனச் சொல்வது இந்த இயக்கத்தின் கொள்கைகைச் சரியாக அறிந்து கொள்ளாத அவசர புத்தியென்றே கொள்ளவேண்டியதிருக்கிறது. பிராமணர்களிடம் இது காரியமாக நமக்கொரு வேலையுமில்லை. அவர்களைத் துன்புறுத்தவும் மனநோகச் செய்யவும் நாம் அருகரல்ல. நம்மை (பிராமணரல்லார்) நாமே திருத்திக் கொள்ளச் செய்வதையே கருமமாகக் கொண்டது. இக்கருமத்தில் தவறுதலேதும் யாரேனுமொருவரால் நிகழ்ந்தப்பெற்றதாயின் அதனுல் இயக்கம் துவேஷங் கொண்டதாவது நாட்டுக்கு நலன் விளைப்பதில்லை யென்பதுமல்ல.

ஆனுல் இதனுல் தேசத்தில் பிரிவினை உண்டாகலாமே யென்று சாந்த மூர்த்திகள் சாதிக்கலாம். வாஸ்தவமே. வன்கண்மைபடைத்த பிரிட்டிஷாரிடத்து இந்தியரும் சுயாட்சியொர்த்தமாக நியாய வழியிலும் ஈண்பர் தோரணையிலும் கேட்கத்தான் செய்கிறோம். ஆனுல் குண்டு பலிதமாகவில்லை தான். இந்தியர்க்குக் கொடுக்கவில்லையே யென்ற வருத்தந்தான். பிரிட்டிஷாருக்கு கேட்கிறார்களே என்ற கவலையும் வருத்தமும் தான். ஆனுல் வாதில்லாமல் சண்டையில்லாமல் இருவருக்குமுள்ள மனமாச்சரியத்தைப் போக்கிக்கொள்ளவே இந்தியராகிய நாம் பிரயாசைப் படுகிறோம். ஆனுல் காலத்தின் இயல்பாலோ வேறு நினைப்பிற் கெட்டாத் தன்மையாலோ டயர் ஆகியும் அடக்குமுறைத் தாண்டவமும் நேர்ந்தேவருகின்றன. என்றாலும் சைமன் பகிஷ்காரமும் தளர்வின்றி நடந்தே வருகிறது. இந்நிலையில் பாரபக்ஷமின்றி நியாயநிலைகொண்டு ஊன்றிக் கவனிப்பின், பிரிட்டிஷார் இந்தியரை மனித எண்ண நிலையுடையவர்கள் தானென்றும், நம்மை யொருவர் அடிமைகொள்ள நாம் சம்மதிப்போமா என்றும் நினைத்து தங்களது அடக்குமுறையைத்தவிர்த்து விடுவார்களாயின் எவ்வளவு நேர்மை துலங்கும்! பரஸ்பரம் எம்மட்டும் நிலவும்! நாடு எம்மட்டும் செழிக்கும்! நன்மைகள் பல விளையுமன்றோ! இஃதே போன்று இந்திய சமூகத்திற்றோன்றிய உடன் சோதரர்களாய பிராமணர்களும் தங்கள் வைதீக மூட்டையை இறக்கிவைத்து விட்டு யாவரிடத்தும் சமூகமாய்ப் பழகி மனவேறுபாடின்றி ஒருவர்க்கொருவர் அளவளாவி அன்பிற்றோய்ந்திருத்தலாகாதோ? ஏன் காய்ந்து சீர்வங்கொள்ளவேண்டும்? சண்டாளத்துவமே இயற்றிவரினும் தான் சாமி சாமியென்றுசாற்றுவது தர்மமல்லவே! சாமிக்குரிய தத்துவத்தைப் பெற்றனரோ? உயர்வுறவேண்டும்? அந்நிலையடைந்தவன்றே மறுப்பின்றி யாரும் கொண்டாடஎங்கும் காத்திருக்கின்றாரன்றோ?

ஆகையால் பிறப்பாலன்றி நடைமுறையில் அனுஷ்டானத்தால் மதிப்புறலாமென்ற நம்பிக்கை கொண்டு யாவரும் வினை நிகழ்த்தாதல் நன்மையாம். பிறப்பால் பெரியவனென்ன பெருமைபேசும் வைதீகப் பழம் பெருச்சாளிகளின் வால் பிடித்துத்திரியும் பிராமணரல்லார் நிலை பற்றிப் பின்னும் தொடர்வாம்.

G. அருணாசலம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## அருப்புக்கோட்டை.

### பார்ப்பனரல்லாத வாலிபர்கள் மேல் பார்ப்பன ஹெல்த் இன்ஸ்பெக்டர் தொடுத்திருக்கும் கேஸ்.

4-2-28-ல் அருப்புக்கோட்டையைச் சேர்ந்த சொக்கலிங்கபுரத்தில் நடந்த சுகாதாரவார மீட்டிங்கில் பார்ப்பனர் நடத்தியிருக்கும் அட்டூழியங்களைப் பற்றி "திராவிடனி"லும் "நாடார் குல"மித்திரனிலும் நேயர்கள் வாசித்திருப்பீர்கள். ஸ்ரீமான் அனந்தநாராயண சாஸ்திரியாரவர்கள் கடவுள் வணக்கம் "சூத்திரன் பாடக்கூடாது; பிராமணன்தான் பாடவேண்டும்" மென்று சொன்னதின் பேரில் சர்க்கார் சம்பந்தமான கூட்டத்தில் சாஸ்திரியார் சாதி இறுமாப்பான பேச்சுப் பேசியது தவறென ஸ்ரீமான் க. மீ. சோமசுந்தரஞ்செட்டியார் கண்டித்தார். உடனம் ஹெல்த் இன்ஸ்பெக்டர் சூழ்கையால் சாஸ்திரியாரை ஒன்றும் சொல்லாமல் செட்டியாரை அடக்கப் பார்த்தார். முடியாததால் தங்களின் வழக்கமான சூழ்ச்சியால், ஷை சோமசுந்தரஞ் செட்டியாரும் அவருடைய சகாக்களும் ஷை மீட்டிங்கை அனுவசியமாகத் தடுத்துக் கலகஞ்செய்ததாக போலீஸில் ரிப்போர்ட்டுக் கொடுத்து ஷை செட்டியார் வகையறாக்களை அரஸ்ட்டும் செய்து சார்ஜ்ஷீட்டும் சப்மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பியாகிவிட்டது. இந்தக் கேசில் க. மீ. சோ. தான் முதல் எதிரி.

ஷை சோமசுந்தரஞ் செட்டியார் இவ்வூர் 10000 தேவாங்கர்களில் ஒரு முக்கியஸ்தர். தேவாங்கர்களால் நடாத்தப்பெற்றுவரும் ஒரு முதல் கிரேடு, இரண்டு 3 வது கிரேடு பாடசாலைகளைப் பரிபாலித்துவரும் தேவாங்க மஹாஜன சபையின் 27 அங்கத்தினர்களில் ஒருவர். பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர்; தேவாங்க குல முனனேற்ற சபையின் வைஸ்-பிரசிடெண்டு. சென்ற வருடம், ஹெல்த் இன்ஸ் பெக்டர் ஸ்ரீமான் சாம்ப மூர்த்தி அய்யர் நடத்திய சுகாதாரவாரக் கொண்டாட்டத்தில் சொக்கலிங்கபுரம் வார்டுக்கு ஷை செட்டியார் செக்ரட்டேரி. ஒரு ஜவுளி வியாபாரி.

இப்படிப்பட்ட ஒருவர், ஒரு சுகாதார மீட்டிங்கின் நிகழ்ச்சியை அனுவசியமாய்த் தடுத்து கலகம் பண்ணினார் என்பதில் எவ்வளவு உண்மையிருக்கலாம் என்பதை அதிகாரிகளும் நேயர்களும் ஊன்றிக் கவனித்து நியாயத்தை உணரும்படி கேட்டுக் கொள்கிறேன், என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## வருகை.

நமது சொந்தச்சோலி யினிமித்தமாக திருவனந்தபுரத்திற்கு 13—2—28-ல் இங்கிருந்து பிரயாணமாகியிருந்த நம் மித்திரன் பத்திராதிபரவர்கள் தம் சோலி முடித்துக்கொண்டு 21-2-28-ல் இரவு இவண் வந்து சேர்ந்தனர்.

சைமன் கமிஷனர்கள் கல்கத்தாவை விட்டு குண்டூர் மார்க்கமாய் 26உ சென்னை வருகிறார்கள். அங்கிருந்து மார்ச்சு மாதம் 3உ புறப்பட்டு தஞ்சை வந்தும் 5உ மதுரைக்கு வந்தும் பின் சென்னை திரும்புவார்கள்.

சென்னைக்கு சைமன் கமிஷன் வருவதை யொட்டி பகிஷ்கார கூட்டங்கள் நடக்கக்கூடாதென அதிகாரிகள் ஜனங்கள் மீது தடை யுத்தரவு போட்டிருக்கின்றனர். ஊர்த்தால் தடை யுத்தரவை மீறி நடத்தப்போவதில்லையென்று சென்னை மாகாண காங்கிரஸ் காரியக்கமிட்டியார் கூடி தீர்மானித்து விட்டனர்.

## செய்தித்திரட்டு.

நாடார் மகாஜன சங்கம் நிரந்தர அக்கிராசனர் பொறையார் ஸ்ரீமான் வெ. கனகசபை நாடாரவர்கள் தஞ்சாவூர் ஜில்லா போர்டு மெம்பராக நாமினேஷன் பெற்றிருக்கிறார். இவ் வெற்றிக்காகப் பல வாழ்த்தல்களும், உபசரணைகளும் ஸ்ரீமான் நாடாரவர்களுக்கு நடக்தேறின.

* *

வியன்னாவிலிருந்து லேக்ஷியுசிதல் என்னுமிடத்திற்கு ஆகாய ரயில்வே ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது. இரும்புத் தூண்கள் நிறுத்தி அவைகள் மேல் கம்பிகள் அமைத்து அதன் மேல் வண்டி யோட்டுகிறார்கள். இரு விடங்களுக்கும் 50 மைல் தூரம். 12 நிமிஷத்தில் பிரயாணம் முடிவுறுகிறது.

* *

லண்டனில் தபால் போக்குவரத்துக்காக பூமியின் கீழ் 6½ மைல் தூரத்திற்கு ரயில்வே போடப்பட்டிருக்கிறது. மணிக்கு 35 மைல் வீதம் ஓடும். தபால் போக்குவரத்து துரிதமாய் நடைபெறவும், மற்ற வண்டி போக்கு வரத்துக்கு தடையிலா தொழியவும் இப்படி பூமியின் கீழ் ரயில்வே போடப்பட்டிருக்கிறது. இதுவே, இத்தகைய வண்டியோடுவதற்கு உலகத்தில் முதற் றடவையாகும்.

* *

பம்பாயில் ஒரு ஐரோப்பியமாது தான் காதல் கொண்ட ஒரு ஐரோப்பியர் தன்னை மணக்க மறுத்துவிட்டதால், தற்கொலை புரிந்துகொண்டாள். இறந்து படு முன் இவ் விபரத்தையும், பிரேத அடக்கச் செலவிற்கு, தன்னிடம் செலவுக்கு ஏராளமாய்ப் பெற்று வந்த ஷை ஐரோப்பியரிடமே பணம் பெறவேண்டு மென்றும் கடிதம் எழுதி வைத்திருக்கிறாள்.

* *

கல்கத்தாவில் ஒரு வீட்டில் நடுநிசியில் ஒரு கொள்ளைக்கூட்டத்தார் நுழைந்து அங்குள்ள ஒரு விதவையை இரும்புப் பெட்டிச் சாவியைக் கொடுத்துவிடக் கேட்க அவள் மறுக்க அவளை கையப்புடைத்து ஒரு குழந்தையைக் கொன்றோடி விட்டனர்.

* *

அமெரிக்காவில் நடந்து வந்த மண்ணெண்ணெய்ப் போட்டி முடிந்து சமாதான மேற்பட்டுவிட்டதாகவும், சோவியத் சர்க்காரால் பறி முதல் செய்யப்பட்ட ருஷிய எண்ணெய் கம்பெனிகளுக்கு ஸ்டாண்டர்டு ஆயில் நஷ்ட ஈடு வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

* *

நமது ஜார்ஜ் சக்கிரவர்த்தி மே மீ ஆரம்பத்தில் பாரிஸுக்கு விஜயமாகி தலைவர் டோமர்கைச் சந்திப்பாரென அறிவிக்கப்படுகிறது.

* *

கடல் விஷயத்தில் யாவருக்கும் சுதந்திரமிருக்க வேண்டுமென்பதைப் பிரிட்டன் மறுக்குமாகில் அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் சண்டை உண்டாகும் என அமெரிக்கக் கப்பற் படைத் தலைவர் ஸ்ரீ பிளங் கெட் பகிரங்கமாகக் கூறிய காரணத்தால் தமது பதவியை விட்டு நீக்கப்பட்டு விட்டார்.

* *

மதுரையில் விடிவி. கிருஷ்ணன் என்ற சௌராஷ்டிர வாலிபன் அவ்வூர் வக்கீல் குமஸ்தா மனைவி குப்பம்மாள் என்ற பிராமண ஸ்திரீயுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டு அப்பெண் வீட்டுக்கு தாராளமாய் போய் வந்து கொண்டிருந்ததாகவும், சென்ற தீபாவளியின்போது இவ்வாலிபன் மதுவருந்தி விட்டு அவள் இல்லஞ் சென்று அவள் இஷ்டத்தை முடிக்க முயன்றதாகவும், அவள் மறுத்து விட்டதாகவும், அதனாலிவன் கோபங்கொண்டு தன் கைத் துப்பாக்கியால் அவளைச் சுட்டு விட்டோடினதாகவும், சிகிச்சையின்பேரில் அவள் பின்னர் சொஸ்தமாகிவிட்டதாகவும் இதுசம்பந்தமாய் தொடுக்கப்பட்டிருந்த வழக்கில் 17-2-28ல் செஷன்ஸ் ஜட்ஜால் அவ்வாலிபனுக்கு 5 வருடக் கடுங்காவல் விதிக்கப்பட்டதென்றும் செய்தி கிடைத்திருக்கிறது.

## சென்னை மாகாண வரவு செலவு திட்டம்.

### 1928-29

சென்னை சர்க்காரால் தயாரிக்கப் பட்டுள்ள 1928—29ம் வருடத்திய வரவு செலவு திட்டத்திலிருந்து பின் வரும் விவரங்கள் தெரிய வருகின்றன.

1928-29ம் வருடத்தில் எல்லாவழிகளிலும் சென்னைமாகாணத்திலிருந்து சர்க்காருக்கு 19 கோடியே 40 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கு மாறாக மொத்த செலவு 20 கோடியே 47 லட்சம் ரூபாயாக திட்டம் போடப்பட்டிருக்கிறது. எனவே ஒரு கோடியே 7 லட்சம் ரூபாய் கம்மிப்படும். இந்திய சர்க்காருக்கு கொடுக்கப்படவேண்டிய மாகாணக் கப்பம் 48 லட்சம் ரூபா நீக்கப்பட்டால் ஷை கம்மித்தொகை 57 லட்சமாகக் குறையக்கூடும்.

இந்த மதிப்பு திட்டப்படி 1928—29ம் வருடத்தில் 8 லட்ச ரூபா அதிக வருமானம் கிடைக்கு மென்றும் ஆனால் செலவினங்களில் ஈனது வருடத்திலும் 93 லட்ச ரூபாய் அதிகமாய் செலவு வருமென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

### வருமானம்.

நிலவரியினால் 7 கோடியே 54 லட்ச ரூபா கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு அடுத்த படியில் கலால் இலாக்காவிலிருந்து 5 கோடி 24 லட்ச ரூபாயும் ஸ்டாம்புகளினால் 2 கோடியே 30 லக்ஷம்ரூபாயும் வருமானம் கிடைக்கும். மற்றவருமானங்களாவன:- காட்டிலாக்காவால் 52 லட்ச ரூ. ரிஜிஸ்டர் இலாக்காவில் 35 லட்சரூபா. நீதியிலாக்காவில் ஏறக்குறைய 13 லட்ச ரூபாய். போலிஸ் 11 லட்சரூபா. சிறைச்சாலைகளும் குடியிருப்புகளும் 10 லட்சம் ரூபா. சிவில் வேலைகள் 8 லட்சம் ரூபா. கைத்தொழில்கள் 7 லட்சம் ரூபா. வருமானவரி 6½ லட்சம் ரூபா. கல்வி 6 லட்சத்து 40 ஆயிரம் ரூபா. சர்க்காருக்கு வரவேண்டிய வட்டிவரையில் 33 லட்ச ரூபா.

### செலவு இனங்கள்.

செலவு கணக்கில் அரசாங்க பொது செலவுக்கு 2 கோடியே 41 லட்சம் ரூபா ஆகிறது. மற்றுஞ் செலவுகள் பின்வருமாறு:-கல்வி 2 கோடி 43 லட்ச ரூபா. சிவில் வேலைக்கு 2 கோடி 18 லட்ச ரூபா; போலீசுக்கு 1கோடியே 94 லட்சரூபா; நீதி யிலாகா செலவு 1 கோடி ரூபா; வைத்திய செலவு 89 லட்ச ரூபா; பென்ஷன் முதலியன 59 லட்ச ரூபா; நீர்ப்பாசனம் 58 லட்ச ரூபா. மாகாண கப்பம் 48 லட்ச ரூபா; சுகாதார வேலைகளுக்கு 47 லட்ச ரூபா; காட்டிலாகா 45 லட்ச ரூபா; கலால் இலாகா 44 லட்ச ரூபா; விவசாயத்துக்கு 38 லட்ச ரூபா; நிலவரி விஷயமாய் 35 லட்ச ரூபா. சிறைச்சாலை குடியிருப்பு முதலியன 33 லட்சரூபா; ரிஜிஸ்ட்ரேஷன் 27 லட்ச ரூபா; கைத்தொழில்களுக்கு 23 லட்ச ரூபா; ஸ்டாம்புக்கு 7 லட்ச ரூபா; பஞ்ச நிவாரண வேலைகளுக்கு 6 லட்ச ரூபா; சாதாரண கடனுக்கு வட்டி 68 லட்ச ரூபா; கடன் தீர்ப்பதற்காக 45 லட்ச ரூபா.

இந்த மொத்தச் செலவில் பென்ஷன் வகையறுவுக்கு 11 லட்சத்து 66 ஆயிரம் ரூபா. அரசாங்கப் பொது செலவு 7 லட்சத்து 68 ஆயிரம் ரூபா; சிவில் வேலைகள் 6 லட்ச ரூபா; வைத்திய செலவு 5½ லட்ச ரூபா; கைத் தொழில்கள் 3 லட்ச ரூபா; ஸ்டேனஷரி அச்சு வேலை 3 லட்சம்.

கல்வி ஏறக்குறைய 2 லட்சம். காட்டிலாக்கா லட்சம் ரூபா. இவ்வளவும் இங்கிலாந்திலே செலவாகிறது.

இந்த வருடத்திய திருத்தப் பட்ட வரவு செலவு கணக்கோடு ஒப்பிட்டுப் பார்த்ததில் 1928-29ம் வருடத்திய திட்டத்தில் பின் வருமாறு அதிக வருமானம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது:—கலால் இலாகா 21 லட்சம்; ஸ்டாம்புகள் 2 லட்சத்து 83 ஆயிரம்; காடுகள் 1 லட்சத்து 81 ஆயிரம்; கைத்தொழில் 1 லட்சம்.

அதற்கு மாறாக நிலவரியில் 10 லட்ச ரூபா குறைவு படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வருடத்திலும், அடுத்த வருடத்திலே கீழ்கண்ட வேலைகளுக்குப் பின்வருமாறு அதிகப்பணம் செலவிடப்படும்; சிவில் வேலைகளுக்கு 49 லட்ச ரூபாய்; கல்வி 19 லட்சம்; அரசாங்கம் 19 லட்சம்; வைத்தியம் 17 லட்சம்; சுகாதாரவேலைகள் 8 லட்சம்; விவசாயம் கைத்தொழில் 3 லட்சம்; ஜெயில்கள் 3 லட்சரூபாய்; போலிஸ் 2 லட்சரூபாய்; நீதியிலாகா 2 லட்ச ரூபாய்; ஸ்டாம்புகள் 77 ஆயிரம்; கலால் 76 ஆயிரம் ரூபாய்; நிலவரி, காட்டிலாக்கா செலவு ஆகிய இரண்டு காரியங்களில் செலவு குறைக்கப்பட்டிருக்கிறது.

### மாற்றப்பட்ட—படாத இலாகாகள்.

மொத்தச் செலவு ரூபா 20 கோடியே 47 லட்சத்தில் 10½ கோடி ரூபாய் மாற்றப்படாத இலாக்காவுக்கு ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறது. அதில் 7 கோடியே 80 லட்சரூபாய் சட்டசபை ஓட்டுக்கு வரக் கூடியது. சொச்சம் 2 கோடி 22 லட்ச ரூபாயும் ஓட்டுக்கு வராமலே எடுத்துக் கொள்ளப் படத்தக்கது.

மாற்றப் பட்ட இலாக்காக்களுக்கு 7 கோடி ரூபா செலவுக்குக் கொடுக்கப்படும். அதில் 6¾ கோடி ரூபாய் சட்டசபை ஓட்டுக்கு வரக் கூடியது.

### வேறு செலவுகள்.

கவர்னர் சுற்றும் பிரயாணத்துக்காக 1 லட்சத்து 38 ஆயிரம்; சட்டசபைகளுக்காக 2 லட்சத்து 84 ஆயிரம்; சென்னை சர்வகலாசாலைக்கு 85 ஆயிரம் ரூபாய்; ஆந்திர சர்வ கலாசாலைக்கு 1 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய். இவைதான் 1928-29ம் வருடத்திய வரவு செலவு திட்டத்திலே குறிப்பிடத்தக்க முக்கிய புள்ளி விவரங்களாகும்.

## திருமலாபுரம், உறவின் முறை நாடார்குலத் தலைவர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

வெகு காலமாக பிரஸ்தாபத்திலிருக்கிறபடி நமது குல மூக்கந்த நாடார், பண்டார நாடார், வெள்ளைய நாடார், திருமால் நாடார் வகையரு சுமார் 15 தலைக்கட்டுக் காரர்களையும் இவ் வருஷ மாரியம்மன், பத்திர காளியம்மன் பொங்கல் உற்சவ காலத்துக்குள் சபையில் சேர்த்து அவர்களிடமும் பொங்கல் வரி மகமை வசூல் செய்ய ஏற்பாடு செய்ய வேணுமாயும், உற்சவ காலத்தில் ஆலயங்களிலும், வீடுகளிலும் ஆடு, கோழி பலி யிடும் வழக்கத்தைக் கண்டிப்பாய் நிறுத்தி விட வேண்டு மென்றும், நம் குலத்தவர்களில் 5 வயது வந்த ஆண், பெண் பாலர்களைப் பள்ளிக் கூடத்திற் கனுப்ப வேண்டு மென்றும், அப்படி அனுப்பாத பெற்றோருக்கு நமது ஜாதி ஆசாரப்படி அபராதம் இலகுவாய் விதிக்க வேண்டு மென்றும் கேட்டுக் கொள்வதோடு, இதற்கு நம் வாலிப சகோதரர்களும் ஒற்றுமையோடு வேலை செய்ய வேண்டு மென்றும், தற்சமயம் முடிவு பெற வேண்டிய பேட்டை வேலையும், அப்பால் நமக்கு அவசியமாக வேண்டிய ஸ்கூல் கட்டட வேலையும் ஆரம்பிக்க வேண்டியது மிருப்பதால் பணத்தை நன்மையான வழியில் செலவு செய்ய வேண்டியதைக் கருதி இவ் வருஷ உற்சவ காலத்தில் வாண வேடிக்கை என்று ஒரு மணி நேரத்தில் பணத்தை விரயம் செய்யும் வழக்கத்தை நிறுத்தி விட வேணு மென்றும் கேட்டுக் கொள்வதாகவும் ஸ்ரீமான் மீ. சி. சுந்தர நாடார் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## எல்லாருக்கும் தீர்க்காயுள்.

### மூதுமையொழிந்த வருங்காலம்.

### பிரஞ்சு டாக்டரின் புதுமையான முயற்சி.

பெயர் பெற்ற பாரிஸ் டாக்டரான ஆசிரியர் ஸெர்ஜ்வொரோனுப் என்பார் ஆங்கிலப்பத்திரிகை யொன்றில் தெரிவித்துள்ள அதிசயமான விவரம் வருமாறு:—

ஸ்திரீ புருஷர்கள் எல்லாரும் நூறு வயதுக்குமேல் வாழ்பவர்கள்; இறுதி வரை வலிமையும் வீரியமும் பொருந்தியவர்கள்; உடலும் உள்ளமும் ஒருங்கே செயற்கரியன செய்யும் திறமை வாய்ந்தவர்கள்; தற்காலத்தில் 'நல்ல வயது காலத்தினர்' என்று நம்பால் சொல்லப்படுவர்களைப் போல எப்போதுமே தங்கள் உறுப்புக்களும், புலன்களும் செவ்வனே இயங்கப் பெற்றவர்கள். இப்படிப் பட்ட பெருமக்கள் வாழும் உலகத்தை நான் எதிர் நோக்குகிறேன்.

அற்புதம் என்று தோன்றக் கூடியதான இப்பெரும் மாறுதல் வெறும் கற்பனை மட்டும் அன்று; வீண் மனோராஜ்யம் அன்று; அது முற்றிலும் சாத்தியமான தொன்றேயாகும்; அதற்குரிய முயற்சி தொடங்கப்பட்டும் விட்டது; ஆனால் அம் முயற்சி குழந்தைப் பருவத்தில் இருந்துவருகிறது.

மனிதன் சக்திக்கு மேற்பட்டதாகக் காணப்படும் புதுமை எதையும் மக்கள் நம்புவது கடினந்தான். ஆனால் சென்ற பத்து வருஷங்களிலே வைத்தியத் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் எத்தனையோ அற்புதங்கள் சித்தியாகிவிடவில்லையா? இன்வாலின், ரேடியம் என்னும் இவற்றின் சக்தியைப் பற்றியும், வானம் கருத்து மழைகொட்டிக் கொண்டிருக்கும் நாளில் வீட்டுக்குள்ளே இருக்கும் நோயாளியின் மீது சூரியனுடைய ஒளிக் கிரணங்களைப் பிரயோகிக்க முடியுமென்பதாகவும் சில வருஷங்களுக்கு முன்பு யாரேனும் கனவிலும் எண்ணியிருக்க முடியுமா? தந்தித் தந்தி, டெலிபோன், டெலிவிஷன் முதலியவைகள் சாத்திய மென்று முதன் முதலில் சொல்லப்பட்ட போது எல்லாரும் எளிதில் நம்பினார்களா? ஆயினும் இவையெல்லாம் இன்று உண்மைகளாகி விட்டன.

### மேலும் மேலும் வெற்றி.

தளர்ந்த உடல்களுக்குப் புதிய பலமும், புதிய இளமையும் தரும் நோக்கத்துடன் நான் செய்துவரும் முயற்சியும் ஜனங்களுக்கு நடக்கமுடியாத ஒரு பைத்தியக்காரத் திட்டமாகத் தோன்றலாம். ஆனால் ஓர் ஆயுள்காலம் முழுதும் இடைவிடாத ஆராய்ச்சியும், சோதனைகளும் செய்த பின்னர் என்னுடைய நோக்கம் கைகூடுதல் சாத்தியம் என்பதை நான் நிரூபித்துவிட்டேன். வருங்காலத்தைப்பற்றி எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டுளது.

மேலும் மேலும் சோதனையில் வெற்றியடைந்ததின் பயனாகவே நான் இவ்வளவு தைரியம் கொண்டேன். என்னுடைய திட்டத்தினால் எவ்வளவு அரிய பெரிய காரியங்கள் சாத்தியம் என்பதையும், வைத்திய சாஸ்திரமானது கிழ உடல்களுக்கு இளமையும், சோர்ந்த மூளைகளுக்குச் சுறுசுறுப்பும், சாதாரண புத்திக்குப் பதில் மேதை அறிவும் அளிக்கக் கூடிய காலம் சந்தேகமின்றிச் சமீபித்துவிட்டது எவ்வாறு என்பதையும் உங்களுக்குச் சொல்லப் போகிறேன்.

முதலில் செம்மறி யாடுகளைக் கொண்டு நான் என் சோதனையைத் தொடங்கினேன். இளஞ் செம்மறியாட்டின் கிளாண்டு என்னும் உயிர் உறுப்பு ஒன்றை எடுத்து, கிழமாய்ப் போன செம்மறியாட்டின் உடலில் பொருத்தினேன். இதன் பயன் மிகவும் திருப்திகரமாயிருந்ததால் மற்ற மிருகங்களிடத்தும் இதே சோதனையைக் கையாண்டேன். அற்புதம் என்று தகும் பயன்கள் விளைந்தன. ஆனால் வைத்தியனுடைய வேலைக்கு முடிவே கிடையாது; அவன் ஒன்றையே, திரும்பவும் திரும்பவும் திருப்பி...

எனவே, புத்திளமை பெற்ற பிராணியிடமிருந்து ஒட்டுப்போட்ட கிளாண்டைத் திரும்ப எடுத்துப் பரிசோதித்தேன். அப்பிராணி சில மாதங்களுக்கெல்லாம் தளர்ச்சியடையத் தொடங்கிற்று; பசி மங்கிற்று; அதன் மயிர் ஒளியை இழந்தது; விரைவில் முன்னைவிட அதிகக் கிழத்தன்மை எய்தியது.

### ஓர் இடையூறு.

பின்னர், நான் ஆழ்ந்து சிந்திக்கலானேன். மிருகங்கள் விஷயத்தில் இம்முயற்சி பலிதமானால், மனிதர்கள் விஷயத்திலும் ஏன் பலித்தல் கூடாது? ஆனால் இங்கே ஓர் இடையூறு எழுந்தது. பல வீனர்கள் எல்லாருக்கும் கிளாண்டுகள் தரக்கூடிய அளவு பல சாவிகளைக் கண்டு பிடித்தல் அரிது. அதிலும் நல்ல கட்டிளமையுள்ளவர்களில் எத்தனை பேர், மற்றவர்களுக்காகத் தங்கள் உயிர் கிளாண்டுகளைத் தர முன் வருவார்கள்? இதனால் அவர்களுக்குக் கெடுதி எதுவும் நேரிடாதென்று உறுதி கூறலாமாயினும், அதற்குத் துணிந்திணங்குவோர் மிகச் சிலராகவே இருப்பர்.

இச் சந்தர்ப்பத்திலேதான் நான் குரங்குகளைக் கொண்டு சோதனை செய்யத் தொடங்கினேன். வாலில்லாக் குரங்கு உடல் அமைப்பில் மனிதனை ஏறக்குறைய ஒத்ததென்பது எல்லாரும் நன்கறிந்த விஷயமே. குரங்கின் இரத்தத்தின் ஒரு துளியையும் பூதக்கண்ணாடி கொண்டு பார்த்தால், அநுபவ சாலிகளுக்குக் கூட ஒரு வேற்றுமையும் புலனாகாது. பற்களின் அமைப்பு, தொடை, மண்டை ஓட்டின் வடிவம் எல்லாம் குரங்கு சாதி மனித சாதியுடன் நெருங்கிய உறவு கொண்டதென்பதை நிரூபிக்கிறது.

### மாறா இளமையும் வலிமையும்.

குரங்குச் சோதனைகளும் முற்றும் திருப்தி யளித்தன. ஐம்பது வருஷத்திற்குள், அதற்குள்ளாகவுங் கூட, மனிதர்களுக்கு அற்புதமான இரண சிகிச்சை செய்தல் சாத்தியமாகும். ஆனால் கிழவர்களுக்கு இளமை தருவதே என்னுடைய நோக்கமன்று. இது கடிகார முள்ளைப் பின்புறம் திருப்புவதையே யொக்கும். என்னுடைய முக்கிய நோக்கம் வேறு. எட்டு வயதிலிருந்து பத்து வயதுக்குள் குழந்தைகளின் உடம்பில் கிளாண்டுகளை ஒட்டுப்போட்டு என்றும் மாறா இளமையும், வலிமையுமுள்ள தேவர்களை யொத்த மக்களைச் சிருஷ்டிக்க வேண்டுமென்பதே அந்நோக்கமாகும்.

தற்போது முக்கியமான கஷ்டம் குரங்குகள் போதிய அளவு இல்லாமையே. ஆனால் இந்த உபயோகமான விலங்குகளைப் பாதுகாக்க நான் ஒரு திட்டம் போட்டிருக்கிறேன். பிரஞ்சு அரசாங்கத்தார் என் வேண்டுகோளுக்கிசைந்து, தங்களுக்குட்பட்ட குடியேற்ற நாடுகளில் குரங்குகளைக் கொல்லக்கூடாதென்றும், வைத்திய காரியங்களுக்காக வல்லாமல் மற்றப்படி ஏற்றுமதி செய்யக் கூடாதென்றும் தடை விதித்திருக்கிறார்கள். பின்னர், மாட்ரிட் நகர் சென்று ஆல்பான்ஸோ அரசரைக் கண்டேன். அவரும் இத்தகைய உத்தரவு பிறப்பித்துள்ளார். பெல்ஜியம் அரசரும் என் வேண்டுகோளுக் கிணங்கியதுமல்லாமல், ஆப்பிரிக்காவிலுள்ள பெல்ஜியன் காங்கோவில் குரங்குகள் அதிகமாயிருக்கும் ஒரு பகுதியைக் குரங்குகளுக்கென்றே ஒதுக்கிவைக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார். பிரிட்டிஷ் அரசாங்கமும் எனக்கு இவ்வாறே உதவி செய்யுமென்று நம்புகிறேன்.

சென்ற ஆண்டில் ரிவரா கடற்கரையில் குரங்குப் பண்ணைக்கு, ஜினேவா முதல் மார்ஸேல்வரை நான் பல மாதங்கள் அலைந்து தேடித் தக்க ஓர் இடங் கண்டுபிடித்தேன். இப்போது என் பண்ணையில் 100 குரங்குகள் இந்த சீதோஷ்ண நிலையில் நன்கு வளர்கின்றன என்று கண்டால் கடற்கரை நெடுக இன்னும் பல பண்ணைகள் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறேன்.

குரங்குகளின் கிளாண்டுகள் மனிதர் உடலில் ஒட்டுப்போடத் தகுந்தனவாவதற்குக் குரங்குக்கு எட்டு வயது ஆகவேண்டும். குரங்குகள் இப்போது குழந்தைகளாகவே கொண்டு வரப்படுகின்றன. ஆதலின் என்னுடைய பண்ணையிலும் நன்கு நடை...

## ஸ்ரீ கோவிந்தசுவாமி யோகிகள்.

### மண்டலாபிஷேகம்.

இராமநாதபுரம் ஜில்லா பெருநாளியில் தபோதனர் ஸ்ரீ கோவிந்தசுவாமிகள் தமது 28-வது வயதில் பூரணமாக உலக மாய மாலங்களைத் தவிர்த்து நிஷ்டை கூடி இருக்கைகொண்ட நிலத்துக் குடையராகிய மகா-௱-௱-ஸ்ரீ ந. அ. மு. முனியாண்டிநாடார் அவர்கள், பரிபூரண உள்ங்கொண்டு ஸ்ரீ சுவாமிகள் தமது புஞ்சையில் சமாதியான பெருமையை கடவுளின் அருட்பேறாகக் கொண்டு அவ்வின் பத்தை அனைத்து ஜனங்களும் அடையவேண்டுமென்ற பெருநோக்குடைத்தாய் நாளிது பிரபவ ஹு தை மீ 30 உ ஸ்ரீ சுவாமிகளுக்கு வெகு சிறப்பாய் மண்டலாபிஷேகமகோற்சவம் தமது சொந்த செலவில் நடத்திவைத்தார்கள். பக்கத்து கிராமங்களிலிருந்தும் கமுதி, அருப்புக்கோட்டை, மதுரை முதலிய விடங்களிலிருந்தும் பக்த கோடிகள் வந்திருந்து ஷை வைபவத்தைக் கண்டு களிகூர்ந்தனர். பஜனைக் கோஷ்டியினரின் பரவசமும் வாணவேடிக்கையின் ஒலியும் மேளதாள முழக்கமும் மக்களின் மனதைக்கவர்ந்து பக்தி விநய ஆனந்தவாரிதி யிலாழ்த்திற்றென்பது மிகையாகாது. அண்டமெங்கணும் அனந்தங்கோடி நகரங்களிருப்பினும் அரிய தபோதனரொருவர்க் கிடமளித்து சிறப்புற்ற பெருநாளி மாநகரின் பெருமையே பெருமை. அதிலும் அன்புக்குரிய அன்பர் பணிக் குகந்தராய் தங்கட்ஞற்றிவரும் பக்த சிகாமணி ஸ்ரீ முனியாண்டி நாடார் அவர்களடைந்த பாக்கியமே பாக்கியம் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

பெற இன்னும் கொஞ்சகாலம் பொறுத்திருந்தாக வேண்டும்.

### முதல் தர மக்கள்.

ஐரோப்பாவில் குரங்கு வளர்க்கும் கஷ்டங்கள் எல்லாம் நீங்கி, என் பண்ணையில் நல்ல திடதேகமுள்ள குரங்குகள் நிரம்பியதும், முதல் தர மக்களை உண்டாக்குவதற்கான என் வேலையைத் தொடங்குவேன். இது வரையில் 600 பேருக்குக் குரங்கு கிளாண்டுகளை ஒட்டுப்போட்டு வெற்றி பெற்றிருக்கிறேன். இச் சிகிச்சை மிகவும் எளியதாகும். சிகிச்சை செய்து கொள்பவர் ஒரு வாரத்திற்குளெல்லாம் வழக்கம்போல் தம் காரியங்களைப் பார்க்கலாம்.

இந்த மகத்தான திட்டம் பூரணமடையுமுன் இன்னும் எத்தனையோ ஆண்டுகள் வேலை செய்தாகவேண்டும். அநுபவத்தில் இன்னும் இடையூறுகள், குறைகள் பல தெரியவரக் கூடும். தளராத தைரியத்துடனும், அசையாத பொறுமையுடனும் அவற்றை யெல்லாம் நீக்க முயலவேண்டும்.

ஆனால் இவ்வளவு நான் நிச்சயமாய்க் கூறமுடியும். இந்த இருபதாம் நூற்றாண்டு முடிவுறுவதற்குள், முதியவர்களுக்கு இளமை தருதலும், முகத்திலும் உடம்பிலும் ஏற்படும் கிழத்தன்மைக்குரிய நரை திரைகளைப் போக்குவதும் மட்டும் அல்ல; முதுமை வருங்காலத்தையே தள்ளிப் போடுதலும், மனிதர்களுடைய ஆயுள் காலத்தைக் குறைந்தது இருமடங்காக்கி, மக்கள் சராசரி 140 வருஷம் வாழும்படி செய்தலும் கட்டாயம் சாத்தியமாகப் போகின்றன. நாளடைவில், குரங்கு கிளாண்டுகளை உசிதமறிந்து உபயோகிப்பதன் மூலமாக மனிதர்களின் பழக்க வழக்கங்களையே மாற்றிப் புதிய குணசங்களைத் தருதலும் சாத்தியமாகலாம். உலகத்தில் குற்றங்களை அடியோடு ஒழித்தலும் மேதாவிகளை சிருஷ்டித்தலும் இயலலாம். ஆனால் இவையெல்லாம் கைகூடுதல் எப்போதென்று நிச்சயமாய்ச் சொல்லமுடியாத வருங்காலத்தில் என்றாலும், மனமும், உடலும், மூளையும், இதயமும் பூரண வலிமை பெற்ற முதல் தர மனிதர்கள், நம்முடன் நெருங்கிய உறவு பூண்ட குரங்கினத்தின் உதவியால் வெகு சமீபகாலத்தில் சிருஷ்டிக்கப்பட்டப் போகிறார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

## ஸ்ரீமான் மா. வே. ஷண்முகவேல் நாடாரவர்கள் ஞாபகார்த்த வாசகசாலை, தூத்துக்குடி.

நிகழும் பிரபவ ஹு மாசி மீ 7 உ 19-2-28 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஷை வாசகசாலை ஹாலில் ஜெனரல் மீட்டிங் ஒன்று மகா-௱-௱-ஸ்ரீ தே. அ. ச. அய்யம்பெருமாள் நாடார் முனிசிபல் கவுன்ஸிலர் அவர்கள் தலைமையின் கீழ் கூடியது. 22 மெம்பர்கள் ஆஜராயிருந்தனர்.

புதுவருஷ உத்தியோகஸ்தர்கள் தேர்தலில், தலைவர் ஸ்ரீமான் தே. அ. ச. அய்யம்பெருமாள் நாடார் அவர்களாகவும், உபதலைவர் ஸ்ரீமான் அ. ச. மாயக்காளைநாடார் அவர்களாகவும், காரியதரிசிகளாக ஸ்ரீமான் அ. து. கலியாணசுந்தரம் அவர்கள், ஸ்ரீமான் கூ. கா. ஆ. பெரியசாமி நாடார் அவர்களும், கணக்குப் பரிசோதகர்களாக ஸ்ரீமான் சு. உ. வெற்றிவேல் நாடார் அவர்கள் ஸ்ரீமான் கே. ஆறுமுக நாடார் அவர்களும், நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களாக, ஸ்ரீமான்களான, ஞா. அ. சு. சண்முகநாடார் பெ. ரா. பெரியசாமிநாடார், சு. முத்துவிஜய நாடார், சி. ச. மலையரச நாடார், அ. க. பா. துரைசாமி நாடார் அரு. சு. அருணாசல நாடார் ஆகியவர்களும், சூப்ரவைசராக ஸ்ரீமான் யம். ஜே. ஆர். நவமணிநாடார் அவர்களும் ஏகமனதாய் தீர்மானிக்கப் பெற்று நியமனம்பெற்றிருக்கிறார்கள்.

குமஸ்தா க. தங்கவேல் நாடார் அவர்களுக்கு மனுவின் பேரில் மாதம் 1-க்கு சம்பளம் கூடுதல் ரூ 2 கொடுக்க வேணுமென்றும் தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது.

அ. து. கலியாணசுந்தரம்,
கூ. கா. ஆ. பெரியசாமி நாடார்,
காரியதரிசிகள்.

---

## நோட்டீஸ்.

இராமநாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டை தாலுகா கோபாலபுரம் கிராமத்திலிருக்கும் மீ. சுப்பாரெட்டியார்மகன் மீனாக்ஷி ரெட்டியார் 1, ஷையூர் ரா. சி. வாலகுருவாரெட்டியார் மகன் சிங்கமரெட்டியார் 2-இரண்டு பேர்களும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறதென்னவென்றால்:—

14-12-27-ல் ஷை தாலுகா அயன் ரெட்டியாபட்டி கிராமத்திலிருக்கும் ரு. நாராயண ரெட்டியார்மகன் ராமசாமிரெட்டி 1, ஷையார் சுவிகார புத்திரன் ராமசாமிரெட்டியார் 2, மாரிரெட்டியார்மகன் ருத்திரப்பரெட்டியார் 3, செர். ராமசாமிரெட்டியார் மகன் வாலகுருவாரெட்டியார் 4, ஷையார் தம்பி, ருத்திரப்பரெட்டியார் 5, சாத்தூர் தாலுகா பெரியபேராளி கிராமத்திலிருக்கும் சுப்பாரெட்டியார்மகன், புரிவிட்டை யென்ற வெங்கிட்டரெட்டியார் 6-ஆறுபேர்களும் எங்களிருவர்களையும் ஆயுதங்களை வைத்துக் கொண்டு பலாத்காரம் செய்து வெற்றுக் கடிதங்களில் எங்களிருவர்களின் இடது கைப்பெருவிரல் ரேகைகளை ஆறேழுதடவைகள் தனித்தனி வாங்கியிருக்கிறார்களென்றும், அதற்காக அவர்களின் பெயரில் கிரிமினல் நடபடிக்கைகள் நடத்திக்கொண்டிருக்கிறோமென்றும், ஷை காகிதங்களைப் பூர்த்தி செய்து எங்கள் பேரில் ஏதாவது வெண்ணிலைப் பத்திரங்களோ நோட்டுகளோ ரசீதுகளோ எழுதினால் அது செல்லாதென்றும், அவைகளை யாராவது மேடோபர்வாங்கினாலும் அல்லது தங்கள் பெயரிலேயே தஸ்தாவேஜுகள் எழுதிக்கொண்டாலும் அவைகள் செல்லாதென்றும், நாங்கள் கையெழுத்துப் போடுகிறவர்களென்றும், ரிஜிஸ்தராபீசில் ரிஜிஸ்தர் செய்யப்பட்டதைத் தவிர மற்ற எந்த தஸ்தாவேஜுகளுக்கும் ரேகை வைத்திருப்பதில்லை யென்றும் இதன் மூலம் தெரிவிக்கிறோம்.

சு. மீனாக்ஷி ரெட்டியார்,
சிங்கம ரெட்டியார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## இரண்டாம் அத்தியாயம்.

### தேச சரித்திரம்.

ஆண்மக்களைப் போலவே போயர் மாதர்களும் தீரமும், கபடற்ற தன்மையும் பொருந்தியவர்கள். போயர் யுத்தத்திலே போயர்கள் தங்கள் இரத்தத்தைச் சிந்தினார்களென்றால், அவர்கள் அவ்வருந் தியாகத்தைச் செய்வதற்கு அவர்களுடைய ஸ்திரீகளின் தைரியமும், வீரமுமே முக்கிய துணைகளாயிருந்தன. அந்தப்பெண்கள் தாங்கள் விதவைகள் ஆகவேண்டி வருமேயென்பது பற்றிச் சிறிதும் கவலைப்பட வில்லை. வருங்காலத்தைப் பற்றி எண்ணுவதில் ஒரு கணமும் வீண்பொழுது போக்க அவர்கள் கண்டிப்பாய் மறுத்துவிட்டார்கள்.

போயர்கள் மதப்பற்றுள்ளவர்கள் என்றும், அவர்கள் கிறிஸ்துவர்கள் என்றும் மேலே கூறினேன். ஆனால் அவர்கள் பைபிள் புதிய ஏற்பாட்டில் நம்பிக்கையுள்ளவர்கள் என்று சொல்ல முடியாது. உண்மையில் ஐரோப்பாவுக்கே புதிய ஏற்பாட்டில் நம்பிக்கை கிடையாதென்று சொல்லி விடலாம். அங்கே ஒரு சிலரே கிறிஸ்துவின் சமாதான மதத்தை உள்ளபடி உணர்ந்து அதை அனுஷ்டிக்கின்றனர். எனினும் ஐரோப்பாவிலுள்ளோர் புதிய ஏற்பாட்டுக்கு மரியாதை செலுத்துவதாகச் சொல்லிக் கொள்கின்றனர். ஆனால் போயர்களோ புதிய ஏற்பாட்டைப் பெயரளவிலேயே அறிவார்கள். பழைய ஏற்பாட்டைத்தான் அவர்கள் பக்தியுடன் படித்து அதில் சண்டைகளைப்பற்றி விவரிக்கும் பகுதிகளை மனப்பாடமும் செய்கிறார்கள். "கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல்" என்னும் மோஸஸின் தத்துவத்தை அவர்கள் முழுதும் ஒப்புக்கொண்டு அவ்வாறே நடக்கிறார்கள்.

போயர் ஸ்திரீகள், தங்கள் சுதந்திரத்தைக் காப்பதற்காகத் தாங்கள் துன்புற வேண்டுமென்று தங்கள் மதம் கட்டளையிடுவதாக அறிந்திருந்தார்கள். எனவே எல்லாக் கஷ்டங்களையும் பொறுமையுடனும், உற்சாகத்துடனும் அவர்கள் சகித்தார்கள். அவர்கள் உறுதியைக் குலைப்பதற்கு லார்டு கிச்சனர் எந்த முயற்சியையும் பாக்கி வைக்கவில்லை. போயர் ஸ்திரீகளை அவர் பிரத்தியேக விடுதிகளில் சேர்த்து அடைத்து வைத்தார். இவ்விடுதிகளில் அம்மாதர்கள் சகிக்கமுடியாத துன்பங்களுக்காளாயினார்கள். அவர்கள் பட்டினி போடப்பட்டார்கள்; பொறுக்கமுடியாத குளிரிலும், தகிக்கும் வெப்பத்திலும் கிடந்து துன்புற்றார்கள். மதுமயக்கத்தினாலோ, காமவெறியினாலோ பித்தான போயர் வீரர்கள் சில சமயம் ஆதரவற்ற இந்த ஸ்திரீகளைத் தாக்கியதும் உண்டு. எனினும் அந்தத் தீரப் பெண்மணிகள் மனஞ் சோர்ந்து விடவில்லை. கடைசியில் எட்வர்டு அரசர் தாம் இம்முறையைச் சகிக்க முடியாதென்று லார்டு கிச்சனருக்கு எழுதினார். போயர்களை அடக்குவதற்கு இஃது ஒன்றே வழியென்றால், இம் முறையில் யுத்தம் நடத்துவதைவிட எத்தகைய சமாதானமும் மேல் என்று தாம் கருதுவதாகவும், யுத்தத்தை விரைவில் முடித்து விட வேண்டுமென்றும் அவர் எழுதினார்.

இந்தத் துயரக்குரல் இங்கிலாந்தை எட்டியபோது ஆங்கிலேயர் மனம் வருந்தினர். போயர்களின் தீரத்தை அவர்கள் பெரிதும் பாராட்டினார்கள். அச்சிறுசாதியார் உலக முழுவதும் பரவிய தங்கள் ஏகாதிபத்தியத்துடன் இவ்வளவு காலம் போர் நடத்தியது அவர்கள் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது. ஆனால் பிரத்தியேக படை வீடுகளில் சேர்க்கப்பட்ட போயர் ஸ்திரீகளின் துயரக்குரல் இங்கிலாந்தை எட்டியபோது ஆங்கில மக்கள் மனங் கலங்கலாயினர். மேற்படி ஸ்திரீகளின் துயரக்குரல் அந்த ஸ்திரீகளின் மூலமாயோ, அல்லது அவர்களுடைய புருஷர்களின் மூலமாயோ இங்கிலாந்தை எட்டவில்லை. புருஷர்கள் யுத்தகளத்தில் தீரத்துடன் போர்புரிந்து வந்தார்கள். ஆனால் தென்னாப்பிரிக்காவில் அப்போதிருந்த உத்தமர்களான சில ஆங்கில ஸ்திரீ புருஷர்கள் மூலமாக

## தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

### மகாத்மா காந்தி எழுதியது.

வே அக்குரல் இங்கிலாந்தை எட்டியது. காலஞ்சென்ற ஸர் ஹென்ரி காம்பெல் பானர்மான் ஆங்கில ஜனங்களின் மனோ நிலையை நன்கறிந்து யுத்தத்தைத் தாக்கிப் பேசத் தொடங்கினார். காலஞ் சென்ற மிஸ்டர் ஸ்டெட், யுத்தத்தில் ஆங்கிலேயரைத் தோல்வியுறச் செய்யும்படி பகிரங்கமாக ஆண்டவனைப் பிரார்த்தித்ததுடன் மற்றவர்களையும் அவ்வாறே பிரார்த்திக்கும்படி கேட்டுக் கொண்டார். இஃது அதி ஆச்சரியமானதொரு கட்சியாயிருந்தது. உண்மையான தீரத்துடன் துன்பஞ் சகித்தலைக் கண்டால் கல்மனமும் கரைந்துவிடாதா? துன்பஞ் சகித்தல் அதாவது தவத்தின் வலிமை அத்தகையதாகும். சத்தியாக்கிரஹத்தின் இரகசியமும் இதுதான்.

இதன் பயனாகவே வீரீனிங் என்னுமிடத்தில் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. முடிவில் தென்னாப்பிரிக்காவின் நான்கு மாகாணங்களும் ஒரே அரசாங்கத்தின் கீழ் ஒற்றுமைப்பட்டன. பத்திரிகை படிக்கும் இந்தியர் ஒவ்வொருவருக்கும் இச் சமாதானத்தைப் பற்றித் தெரிந்திருக்குமாயினும் அது சம்பந்தமான சில விவரங்களை அநேகர் அறியமாட்டார். சமாதானம் ஏற்பட்ட உடனே மாகாணங்கள் ஒன்று சேர்ந்து விடவில்லை. ஒவ்வொரு மாகாணத்திலும் தனித் தனிச் சட்டசபை இருந்தது. மந்திரி சபை சட்டசபைக்கு முழுதும் கட்டுப்பட்டிருக்கவில்லை. டிரான்ஸ்வால், பிரீஸ்டேட் இரண்டு மாகாணங்களும் குரௌன் காலனி முறையில் (பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேரான அதிகாரத்தின் கீழ்) ஆளப்பட்டன. தளபதி போதாவும், தளபதி ஸ்மட்ஸும் இத்தகைய நிலையில் திருப்தி யடைவோரல்லர். அவர்கள் சட்டசபையிலிருந்து விலகினார்கள்; ஒத்துழையாமை கைக் கொண்டார்கள்; அரசாங்கத்தோடு எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ள முடியாதென்று கண்டிப்பாக மறுத்து விட்டார்கள். லார்டு மில்னர் இது குறித்துக் காரமாகப் பேசினார். தளபதி போதா தம்மைப்பற்றி இவ்வளவு அதிகமாய் நினைத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லையென்றும், அவரில்லாமலே அரசாங்கம் நடக்குமென்றும் அவர் சொன்னார். இவ்வாறு அரிச்சந்திரன் இல்லாமல் அரிச்சந்திர நாடகம் நடத்த லார்டு மில்னர் தீர்மானித்தார்.

போயர்களின் தைரியம், சுதந்திரப் பற்று, சுயநலத்தியாகம் இவற்றைப் பற்றி நான் தாராளமாய்ப் புகழ்ந்திருக்கிறேன். ஆனால் அவர்களுக்குச் சோதனைகாலம் நேர்ந்தபோது அவர்களிடையே அபிப்பிராயபேதம் நேரவில்லை யென்றாவது, அவர்களுக்குள் உறுதி பிறழ்ந்தவர்களே இல்லையென்றாவது வாசகர்கள் எண்ண வேண்டாம். போயர்களுக்குள் கொஞ்சத்தில் திருப்தி செய்யக் கூடிய ஒரு கட்சியை லார்டு மில்னர் உண்டு பண்ணினார். இக்கட்சியாரின் உதவி கொண்டு சட்டசபையை வெற்றியுடன் நடத்திவிடலாமென்று அவர் நினைத்தார். ஆனால் ஒரு நாடகத்தைக் கூட கதாநாயகன் இல்லாமல் நடத்த முடியாதன்றோ? அப்படியிருக்க, இவ்வுலக காரியங்களில் பிரதான பாத்திரத்தை ஒதுக்கிவிட்டுக் காரியத்தை வெற்றி பெற நடத்தலாமென்று எண்ணும் இராஜ்ஜிய நிர்வாகியைப் புத்திசாலி என்று சொல்லமுடியுமா? லார்டு மில்னர் சங்கதியும் இப்படியே யாயிற்று. அவர் வெளிக்கு மேற்சொன்னவாறு அலட்சியமாய்ப் பேசினாராயினும், தளபதி போதாவின் உதவியில்லாமல் டிரான்ஸ்வாலையும், பிரீஸ்டேட்டையும் ஆளுதல் மிகவும் கஷ்டமென்று கண்டபடியால், அடிக்கடி அவருடைய தோட்டத்தில் கவலையுடனும் கிளர்ச்சியுடனும் உலாவிக் கொண்டிருப்பதுண்டு எனச் சொல்லப்படுகிறது. வீரீனிங் உடன்படிக்கையின்படி போயர்களுக்கு உடனே உள்நாட்டு நிர்வாகத்தில் பூரண உரிமை யளிக்கப்பட வேண்டும் என்பதாக தளபதி போதா தெளிவாகச் சொன்னார். நிஃதில்லையென்றால் தாம் உடன்படிக்கையில் கையொப்ப மிட்டிருக்கவே மாட்டாரென்றும் அவர் கூறினார். தளபதி போதாவுக்கு அத்தகைய வாக்குறுதி ஏதுவும் தாம் கொடுக்க வில்லையென்று லார்டு கிச்சனர் பதிலிறுத்தார். போயர்கள் தங்களுடைய இராஜவிசுவாசத்தை நிரூபித்து வந்தால் அதற்கேற்பச் சிறிது சிறிதாகப் பூரண சுயாட்சி அளிக்கப் படுமென்று அவர் சொன்னார். இவ்விருவரில் எவர் கூறுவது சரியென்று தீர்ப்புக் கூறுவது யார்? தளபதி போதா மத்தியஸ்தத்துக்குச் சம்மதிக்க வேண்டுமென எதிர் பார்த்தல் சரியாகாது. இவ்விஷயத்தில் அக்காலத்து ஏகாதிபத்திய அரசாங்கத்தார் செய்த முடிவு அவர்களுக்குப் பெரிதும் கீர்த்தி தருவதாகும். இரு கட்சியாரில் பலசாலிகளாயுள்ளோர், பலத்தில் குறைந்த கட்சியாரின் வியாக்கியானத்தை ஏற்றுக் கொள்வதே முறையாகுமென்று அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். நீதி, சத்தியம் என்னும் கொள்கைகளின்படி அதுவே சரியான வியாக்கியானமாகும். நான் பேசியபோது என்ன பொருளுடனே பேசியிருக்கலாம். ஆனால் அப்பேச்சைக் கேட்டவன் அதற்கு என்ன பொருள் கொண்டானோ அதையே அஃது அவனைப் பொறுத்ததாயுள்ள அளவுக்கு நான் ஒப்புக் கொள்ளவேண்டும். நமது வாழ்க்கையில் இந்த உத்தமோத்தமமான விதியை நாம் அடிக்கடி புறக்கணித்து விடுகிறோம். நமது விவாதங்களில் பல இதனாலேயே எழுகின்றன. பொய்யைவிடக் கேடான அரை உண்மையை, உண்மைக்குப் பதிலாகக் கைக்கொள்ள நேரிடுகிறது.

இவ்விஷயத்தில் சத்தியம் பூரண வெற்றியடைந்தபோது தளபதி போதா வேலைசெய்ய ஆரம்பித்தார். எல்லா மாகாணங்களும் ஒன்று சேர்க்கப்பட்டுத் தென்னாப்பிரிக்கா பூரண சுயராஜ்யம் அடைந்தது. தென்னாப்பிரிக்காவின் கொடி யூனியன் ஜாக் கொடி என்பதும், தேச படங்களில் அதற்குச் சிவப்பு வர்ணம் பூசப்படுகிறதென்பதுமன்றி, மற்றப்படி தென்னாப்பிரிக்கா பூரண சுதந்திரம் அனுபவிக்கிறது என்று கூறுதல் மிகையாகாது. தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தின் சம்மதமின்றி அதன் பணத்தில் ஒரு பைசாவேனும் பிரிட்டிஷ் அரசாங்கம் எடுத்துக்கொள்ள முடியாது. இது மட்டுமன்று; தென்னாப்பிரிக்கா யூனியன் ஜாக் கொடியை நீக்கிவிட்டுப் பெயரளவிலும் சுதந்திர நாடாக விரும்பினால் அப்படியே செய்ய அதற்கு உரிமையுண்டு என்று பிரிட்டிஷ் மந்திரிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், போயர்கள் இவ்வளவு நாளாக அவ்வாறு செய்யவில்லையென்றால் அதற்குப் பலமான காரணங்கள் இல்லாமற் போகவில்லை. போயர் தலைவர்கள் மதிநுட்பம் வாய்ந்தவர்கள்; யோசனை யுள்ளவர்கள். தங்களுக்கு நஷ்டம் எதுவும் இல்லாதவரையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் ஒருவிதப் பங்காளிகளாயிருப்பதில் தவறு ஒன்றுமில்லையென்று அவர்கள் கருதுகிறார்கள். மற்றொரு முக்கிய காரணமும் இருக்கிறது. நேட்டாலில் ஆங்கிலேயரின் தொகையே அதிகம். கேப்காலனியில் ஆங்கிலேயர் போயர்களை விட அதிகதொகையினர் அல்லவாயினும் அவர்கள் அங்கும் ஏராளமாய் வசிக்கிறார்கள். ஜோகானிஸ்பர்க்கில் இங்கிலீஷ்காரர்களே அதிகம். இந்நிலையில் போயர்கள் [illegible]

சுதந்திரக் குடியரசு ஸ்தாபிக்க விரும்பினால், உள் கலவரங்களும், உள்நாட்டு யுத்தமும் ஏற்படக் கூடும். ஆகையினால்தான் தென்னாப்பிரிக்கா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்ததாய் இருந்து வருகிறது.

தென்னாப்பிரிக்கா அரசியல் அமைப்பு தயார் செய்யப்பட்ட விதம் குறிப்பிடத்தக்கது. மாகாண சட்டசபைகளினால் எல்லாக்கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டார்கள். இப்பிரதிநிதிகள் அடங்கிய தேசிய சபை ஒரு மனதாக ஒரு நகல் திட்டத்தைத் தயாரித்தது. அத்திட்டத்தை பிரிட்டிஷ் பார்லிமெண்டார் அப்படியே அங்கீகரிக்க வேண்டியிருந்தது. காமன்ஸ் சபை அங்கத்தவர் ஒருவர் அத்திட்டத்திலிருந்த இலக்கணப் பிழையொன்றைச் சபையின் கவனத்துக்குக் கொணர்ந்து அதைத் திருத்த வேண்டுமென்று சொன்னார். ஸர் ஹென்ரி காம்பெல் பானர்மான் அந்த யோசனையை நிராகரித்து, அரசாங்க நிர்வாகத்திற்கு இலக்கணம் இன்றியமையாததன்று என்றும், பிரிட்டிஷ் மந்திரி சபையும் தென்னாப்பிரிக்கா மந்திரிகளும் கலந்தாலோசித்ததின் பயனாக அந்த அரசியல் அமைப்பு தயாரிக்கப் பட்டிருக்கிறதென்றும், அதில் இலக்கணப் பிழையைத் திருத்தும் உரிமை கூட பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குக் கிடையாதென்றும் சொன்னார். ஆதலின் அவ்வமைப்பு ஓர் எழுத்தினளவில் கூட மாறுதலின்றிப் பார்லிமெண்டின் இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்டது.

இது சம்பந்தமாகக் குறிப்பிடத் தக்கதுமற்றொன்றுண்டு. தென்னாப்பிரிக்கா அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள சில விதிகள் புதிதாய்ப் படிப்பவர்களுக்குப் பொருளற்றனவாகத் தோன்றும். அவை செலவு மிகவும் அதிகமாவதற்கும் காரணமாயிருந்திருக்கின்றன. அமைப்பைத் தயாரித்தவர்களுக்கு இப்படியாகுமென்று தெரியாமலில்லை. ஆனால் அமைப்பு குறையற்றதா யிருக்கவேண்டுமென்பது அவர்களுடைய நோக்கமேயன்று. ராஜிப் பேச்சினால் ஒருவித ஒற்றுமையான முடிவுக்கு வந்து வெற்றி பெற நடத்திவைக்கக்கூடிய அரசியல் அமைப்பைத் தயாரிப்பதே அவர்கள் இலட்சியமாயிருந்தது. ஆகையினால் தான் தென்னாப்பிரிக்காவுக்கு நான்கு தலை நகர்கள் இருக்கின்றன. ஒரு மாகாணமாவது தன் தலைநகர பாத்தியதையை விட்டுவிடத் தயாராயில்லை. இவ்வாறே பழைய சட்டசபைகள் கலைக்கப்பட்டனவாயினும், புதிய மாகாண சபைகள் சின்ன விஷயங்களில் மட்டும் அதிகாரங்களுடன் சிருஷ்டிக்கப் பட்டன. கவர்னர் பதவிகள் எடுக்கப்பட்ட போதிலும், அப்பதவிக் குச் சமமான உத்தியோகங்கள் "மாகாண நிர்வாகிகள்" என்ற பெயருடன் ஏற்படுத்தப் பட்டன. நான்கு சட்டசபைகளும், நான்கு தலைநகர்களும், நான்கு கவர்னர்களும் அநாவசியமென்று எல்லாருக்கும் தெரியும். ஆனால் மதயூகிகளான தென்னாப்பிரிக்கா இராஜ தந்திரிகள் இதைப் பொருட்படுத்தவில்லை, இது வெளி ஆடம்பரமான ஏற்பாடேயாயினும் அதிகப்படியான செலவுக்குக் காரணமாயிருப்பினும், ஒற்றுமையை முன்னிட்டு அவர்கள் இதுவே தக்க ஏற்பாடென்று கருதிச் செய்தார்கள். வெளியார் என்ன சொல்வார்களென்பதைப்பற்றி அவர்கள் கவனிக்கவில்லை. பிரிட்டிஷ் பார்லிமெண்டையும் இந்த ஏற்பாட்டையே ஒப்புக்கொள்ளும்படி செய்தார்கள்.

தென்னாப்பிரிக்கா தேச சரித்திரம் சுருக்கமாகவேனும் வாசகர்களுக்குத் தெரிந்திராவிடின் சத்தியாக்கிரஹப் போராட்டத்தின் உட்கருத்தை அவர்களுக்கு விளக்குதல் கஷ்டமென்று தோன்றியபடியால் அச்சரித்திரத்தை மேலே சுருக்கமாகக் கூறினேன். இந்தியர்கள் இந்நாட்டுக்கு எவ்வாறு வந்தார்கள். சத்தியாக்கிரஹ இயக்கத்துக்கு முன்பு அவர்களுடைய கஷ்டங்களை எதிர்த்து எப்படிப் போராடினார்கள் என்பவை குறித்து இனி கவனிப்போம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection